ஶ்ரீ:

# प्रात: स्मरणस्तोत्रम्

भगवान् श्रि आदि शङ्करः

# ப்ராத: ஸ்மரண ஸ்தோத்திரம்

பகவான் ஶ்ரீ ஆதி சங்கரர்



## வைகறை நினைக்கும் மெய்மறை


நன்முனைப்பால் மொழிபெயர்ப்பு

**மீ. ராஜகோபாலன்**

உ

## முழுமுதற்குருவே போற்றி




### குறிப்பு

ஸம்ஸ்கிருதச் சொற்களின் தமிழ் வார்ப்புக்களில், சரியான உச்சரிப்புக்கு உதவும் பொருட்டு, சில எழுத்துக்களுக்குக் கீழே காணும் எழுத்துக்கள் கொள்ளப்பட்டன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ख | க$_2$ (சகதி) | ग | க$_3$(ராகம்) | ठ | ட$_2$ (பட்டம்) |
| च | ச (மிச்சம்) | छ | ச$_2$ (சாறு) | ड | ட$_3$ (குடம்) |
| श | ஶ (ஸ்ஷிவம்) | ष | ஷ (புஷ்பம்) | थ | த$_2$ (மதம்) |
| फ | ப$_2$ (பருப்பு) | ब | ப$_3$ (இன்பம்) | द | த$_3$ (பாதம்) |
| घ | க$_4$(ராகவன்) | स | ஸ (ஸர்வம்) | ज | ஜ (ஜன்னல்) |
| ध | த$_4$ (தனம்) | भ | ப$_4$(பயம்) | ह | ஹ (ஆஹாரம்) |

November 2014

www.meenalaya.org



**ஓம் ஸ்ரீ குருப்யோ நம:**





ஐங்கர சங்கர அருமறை முதலே
அனுதின முதலிருந் தருள்தரு திருவே
மங்களக் காலடி மலர்முகிழ் நிதியே
மறைமெய் மொழிதரு மதிவருங் குருவே

விழித்தும் விடைத்தும் விதைத்துள் மடமை
பதித்தும் கிடக்கும் பழியவை உடைத்து
எழுமின் எனயெமை எழுப்பிடும் குருவை
தொழுமென் னுள்ளம் துணைகுரு வடிவே

## முகவுரை

பகவான் ஆதி சங்கரர் அருளிய, மூன்று பாடல்களை மட்டுமே கொண்டுள்ள, ‘ப்ராத ஸ்மரண ஸ்தோத்திரம்’ எனும் இச்சிறிய நூலில், மிகப் பெரிய ரகசியமாகிய, மறை பொருள் உண்மை அடங்கி இருக்கிறது. அதனை நாம் நன்றாகப் புரிந்து, உணர்ந்து நடந்தால், இவ்வாழ்க்கையில் நமக்கு மிகப் பெரிய வலிமையும், விடுதலையும் கிடைத்துவிடும்.

ஆனால் வேதாந்தம் என்றாலே, ‘இதெல்லாம் நமக்குப் புரியாதது’ என்று நம்மில் பெரும்பாலோர் ஒதுங்கி விடுகின்றோம். வேதாந்தமும், அவற்றின் விளக்கமாக ஆதி சங்கரரும், அவரைப் போன்ற பல ஞானிகளும் தந்திருக்கும் உரைகள் எல்லாமும், சம்ஸ்கிருத மொழியிலேயே அமைந்திருப்பதாலும், அம்மொழியை நாம் நன்கு அறிந்திராத காரணத்தாலும், விரும்பினால் கூட, நம்மால் அவற்றைப் படிக்க முடிவதில்லை. அவற்றின் மொழி பெயர்ப்புக்களாகப் பலர் அளித்திருக்கும் உரை நூல்களும், விளக்கங்களும் எளிதில் புரிந்து கொள்வதற்கு உதவாமல் மிகவும் கடினமானதாக இருப்பதாகவே தோன்றுகின்றன.

மற்றும் வேதாந்தம் என்பது, வயதான காலத்தில் மட்டுமே படிப்பது என்றும், அல்லது உலக வாழ்க்கையை உதறிவிட்டுத் துறவு கொள்பவருக்கு மட்டுமே என்றும் சிலர் நினைப்பதுண்டு.

மேலும் நம்மில் பலருக்கு, வேதாந்தம் மற்றும் ஆதி சங்கரர் போன்ற ஞானியரின் நூல்கள் எல்லாம், ஒரு மதத்தினைச் சார்ந்த கருத்துக்கள் என்பதாகவும், கடவுள்கள் பற்றிய நம்பிக்கையை ஒட்டியே அவை எல்லாம் உள்ளன என்பதாகவும், அத்தகைய நிரூபிக்க முடியாத நம்பிக்கைகளை ஏற்க முடியாது என்பதாகவும் பல எண்ணங்கள் உண்டு. அறிவியல் முன்னேற்றம் அடைந்து வரும் நமக்கு, வேதாந்தப் படிப்பெல்லாம் தேவையற்றது எனவும் நினைத்து, இவற்றைத் தவிர்ப்பவர்களும் உண்டு.

இதன் காரணமாக, மனிதர்கள் எல்லாம் அறிந்து, உணர்ந்து, உயர்ந்து வாழ வேண்டும் என்பதற்காகவே அளிக்கப்பட்ட, இவ்வரிய அறிவுப் பொழிவு எல்லாம், பாலை நிலத்திலே கொட்டி வீணாகும் பருவ மழையைப் போலவே இருக்கின்றன.

வேதாந்தமும், பகவான் ஆதி சங்கரர் போன்ற ஞானிகளது விளக்கங்களும் நிச்சயமாக ஒரு மதத்தினைச் சார்ந்தோ அல்லது ஒரு குறிப்பிட்ட மனித சமுதாயத்துக்கு மட்டுமென்றோ, நிரூபணத்திற்கு அப்பாற்பட்ட வெறும் நம்பிக்கையால் மட்டுமே விளந்தவை என்றோ கொள்வதும் தவறு. அவை பொதுவுடமை, எல்லா மனித சமுதாயத்துக்கும் கிடைத்துள்ள பரிசு! ஏனென்றால் வேதாந்தம் என்பது, முழுக்க முழுக்க நம்மைப் பற்றியது மட்டுமே. அது, நம்மையும், நாம் வாழும் உலகத்தையும், இவை எல்லாவற்றுக்குக் காரணமான சக்தியையும் பற்றிய அறிவே ஆகும்.

வேதாந்தப் படிப்பு என்பது போல வேறு எந்தப் படிப்பும் இருப்பதில்லை. வேதாந்தப் படிப்பு, நம்மையே நாம் படிப்பது. அதுவே தன்னறிவும், தன்னுணர்வும் தரக்கூடிய ஆய்வு. அதன் உண்மை, நம்மை உயர வைப்பது, உயர்த்தி வைப்பது. உலக அனுபவங்களை எல்லாம் இனிமையாக மட்டுமே ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தை தரக்கூடியது. எல்லோரும், எப்போதும் முனைந்து அறிந்து கொள்ள வேண்டிய மருந்து, உண்மை விருந்து.

அத்தகைய வேத சாரத்தை மட்டுமே தருகின்ற இந்த நூலைப் படிக்க ஆரம்பித்துவிட்ட உங்களுக்கு, இதை படித்து முடிக்கும்போது, உங்களுக்குத் தேவையான,வாழ்க்கைக்கு உறுதுணையான ஓர் மறை பொருள் உண்மையினையே இந்த நூல் தந்து விட்டது என்ற உறுதி வர வேண்டும், அப்படியே வரும். அதன் பொருட்டே, இவரிய நூலை, ஆழ்ந்து பயிலுங்கள் எனப் பரிந்து அழைக்கிறேன்.

முதலில் இந்நூலின் தலைப்பைப் புரிந்து கொள்வோம்.

‘ப்ராத ஸ்மரண ஸ்தோத்திரம்’ எனும் இந்நூலின் தலைப்பின் பொருள், ‘அதிகாலையில் சிந்திக்கப்பட வேண்டிய பேருண்மை’ என்பது ஆகும்.

சம்ஸ்கிருத மொழியில், பொதுவாக, ‘ஸ்தோத்திரம்’ எனும் சொல்லுக்கு, ‘புகழுதல்’ என்பதே பொருள். இந்த நூலினை ஆய்ந்தால், இத்தலைப்பில், ‘ஸ்தோத்திரம்’ என்பதற்குப் ‘போற்றுதற்குரிய உண்மை’ என்று நாம் பொருள் கொள்வது சரியாகப்படும். அப்படிப் போற்றுதற்குரிய மறை பொருள் உண்மை, ஒரு பரம ரகசியம் ஆகும்.

பொதுவாக, எது மற்றவர்களுக்குத் தெரியாமல் மறைத்து வைக்கப்பட்டுள்ளதோ, அதையே நாம் ரகசியம் என அழைப்போம். ஆனால் அந்த ரகசியமே, ஒருவரால், ஒரு முறையேனும் வெளிப்படையாகக் கூறப்பட்டு விட்டால், அதற்குப் பிறகு அதை நாம் ரகசியம் என்று அழைப்பது இல்லை. ஏனெனில், அறிவினாலோ, புலனினாலோ அதை நாம் அறிந்து கொண்டு விட்டால், அதற்கு அப்புறம் அது ரகசியமாய் விளங்குவதில்லை. எல்லா அறிவியற் கண்டுபிடிப்புக்களும் கூட இப்படித்தான் - ஒரு சமயத்தில், ரகசியமாய் இருந்து, பிறகு வெளிப்படையாகி விடுவன. ஆனால் ஆன்மிகக் கண்டுபிடிப்பான மறை பொருள் உண்மை, எப்பொழுதுமே ஒரு பரம ரகசியமாகவே இருப்பது.

பரம ரகசியம் என்றால், எந்த ரகசியம், பல முறையும் ‘இதுதான் அது’ எனக் காட்டப்பட்டிருந்தாலும், அது தொடர்ந்தும் ஒரு ரகசியமாகவே இருந்து வருவது. ‘இதுதான்’ என அந்த மறை பொருள் உண்மை ஒருக்கால் விளக்கப்பட்டாலும், அது ஒவ்வொருவருடைய தனி அனுபவத்திலே மட்டுமே உணரப்படக் கூடியதாகவே இருக்கிறது. அதனால்தான், ஒருவரின் படிப்பினாலோ, கேள்வியினாலோ, புலனறிவினாலோ, மனதினாலோ அடையப்படாமல், ஒவ்வொருவரின் அனுபவத்தில் மட்டுமே உணரப்படும் உண்மையாக, அது எப்பொழுதும் ‘பரம ரகசியமாக’ இருக்கிறது. அந்தப் பரம ரகசியம் என்ன

என்பதைத்தான், வேதாந்த சாரமான இப்பாடல்கள் சுட்டிக் காட்டுகின்றன.

நூலின் தலைப்பில் உள்ள, இரண்டாம் சொல்லான ‘ஸ்மரணம்’ என்பதற்கு ‘அறிவால் சிந்தித்தல்’ என்பது பொருள். இவ்வாறு ‘சிந்தித்தல்’ என நூலின் தலைப்பில் நாம் பொருள் கண்டாலும், நூலில் இருக்கும் மூன்று பாடல்களையும் ஆராயும் பொழுது, முதற்பாடலிலே ‘ஸ்மராமி’, இரண்டாம் பாடலில் ‘பஜாமி’, மூன்றாம் பாடலிலே ‘நமாமி’ – அதாவது முறையே, ‘சிந்திக்கிறேன்’, ‘துதிக்கிறேன்’, ‘பணிகிறேன்’ எனத் தொடங்கி இருப்பதால், அறிவு, மனம், உடல் என எல்லா வகையிலும் ஏற்கப்பட வேண்டிய மறை பொருள் உண்மை என்பதையே, நாம் தலைப்பின் ஆழ்ந்த பொருளாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

நூலின் தலைப்பில் உள்ள முதற்சொல்லாகிய ‘ப்ராத:’ என்பது ‘அதிகாலை’ என்றாகும். சம்ஸ்கிருத மொழியில் ‘ப்ரா’ என்பதற்கு ‘முன்னதாக’ என்பது பொருள். உதாரணமாக, ‘ப்ரதோஷம்’ என்றால் ‘தோஷ:’ எனும் இரவுக்கு முந்தைய நேரம், அதாவது மாலை நேரம். ‘ப்ரபோத’ என்றால் ‘போத:’ எனும் காலைக்கு முந்தைய நேரம். ‘ப்ராத:’ என்பதும் அவ்வாறே, அதிகாலையைக் குறிப்பது.

அப்படியானால் தலைப்பின் கருத்து, அதிகாலைப் பொழுதில், அறிவாலும், மனதாலும், உடலாலும், சிந்தித்துத் துதித்துப் பணிகின்ற மேலான மறை பொருள் உண்மை என்பதே ஆகும்.

அந்தப் பரம ரகசியமான மறை பொருள் உண்மை என்ன? அதை சிந்திப்பதால் என்ன பயன்? அதுவும், அதிகாலையிலேயே அதைப் பற்றி சிந்திக்க வேண்டிய காரணம் என்ன? இந்தக் கேள்விகளுக்கு நாம் நிச்சயமாக விடை வேண்டுகின்றோம். எனவே இவற்றைச் சுருக்கமாக ஆராய்வோம்.

முதலில் நம்முடைய நாட்களைப் பார்ப்போம்.

நம்மைப் பொறுத்தவரை, துயிலில் இருந்து காலையில் எழும் போதுதான், நமக்கெல்லாம் அன்றைய வாழ்க்கையே தொடங்குகிறது. பிறகு இரவில் படுத்து உறங்கத் தொடங்கியவுடன் அன்றைய வாழ்க்கை முடிந்து விடுகிறது. அதனால், விழித்திருக்கும் நிலைதான் முதன்மையானது என நமக்குத் தோன்றுகின்றது. அந்த நிலையில்தான், நாம் உலகத்துடன் உறவாடுகின்றோம். விழிப்பு நிலையில் உள்ள உலகத்து விவகாரங்களில்தான் நாம் நமது வாழ்க்கையை நடத்துகின்றோம். அதனால் உலக அனுபவம்தான் நமது வாழ்க்கை என்று எண்ணுகின்றோம்.

நாம் அனுபவிக்கும் உறக்கம் என்பது ஒரு அறியாமை என்பதும், நமது உலக நடைமுறைச் செயல்களுக்கு, உறக்கம் ஒரு அவசியமான தினசரி ஓய்வு என்பதும் நம் எண்ணம். அதனால் உறக்கம் என்பது நமது வாழ்க்கைக்கு இயற்கை விதிக்கும் இடைச்செருகல் என்றுதான் நமக்குத் தோன்றுகிறது.

நாம் உறங்கும் பொழுது, ஒருவேளை கனவுகளில் வீழ்ந்தால், அந்தக் கனவு அனுபவங்களையும், இடைச் செருகல்களாகத்தான் நாம் எடுத்துக் கொள்கிறோம். உலக விழிப்பு அனுபவத்தைப் போலவே, கனவு அனுபவங்களும் நமக்கு பாதிப்பைத் தந்தாலும், கனவை நாம் ஒரு கற்பனையாகத் தள்ளி விடுகிறோம்.

அதாவது, விழிப்பு, கனவு, துயில் எனும் அனுபவங்கள் நமக்கு மாறி மாறி வந்தாலும், நமது வாழ்க்கை விழிப்பு அனுபவங்களில் மட்டுமே இருக்கிறது, அதனால் அதுவே உண்மை என்று இருக்கிறோம். விழிப்புலக அனுபவங்களை எல்லாம் இனிதாக மாற்றிக் கொள்ளத்தான் நாம் தினமும் போராடுகின்றோம். அதற்கான செயல்களைச் செய்யவும், அச்செயலுக்குத் தேவையான அறிவையும், ஆற்றலையும் வளர்த்துக் கொள்வதுமே, வாழ்வில் நமது முக்கியக் குறிக்கோள்.

இதைப் புரிந்து கொண்டவர்கள்தான், தம்மைத் தயார் செய்து கொள்ள, தினமும், நாள் தொடங்கும் முன்னேயே எழுந்து,

உலக வாழ்க்கைக்குத் தேவையான அறிவையும், ஆற்றலையும் வளப்படுத்திக் கொள்ள உழைப்பார்கள். அது அவசியம்தானே! உதாரணமாக, படிக்கும் மாணவன் அதிகாலையில் படிப்பதும், விளையாட்டுப் போட்டிக்குத் தயார் செய்பவன், விளையாட்டுப் பயிற்சியைச் செய்வதும், இப்படி அவரவர் தேவைக்கேற்ப, நாள் தொடங்கும் முன்னேயே, பயிற்சியும், அவை பற்றிய சிந்தையையும் கொண்டு இருத்தல் நல்லதல்லவா! இதைத்தானே நமக்கு உலக வாழ்க்கையில் முன்னேற்றத்துக்கான பாடமாகச் சொல்லி இருக்கிறார்கள்!

அப்படி இருக்கும் போது, அதிகாலையில் எழுந்து விட்டால், அந்த நேரத்தையும், இவ்வாறான உலக அறிவு, ஆற்றலுக்குப் பயன்படுத்தாமல், மறை பொருள் உண்மை எனும் ஆராய்ச்சி எல்லாம் நமக்குத் தேவைதானா?

இக்கேள்விக்கு முதலில் உலக வாழ்க்கைத் தேவையை ஒட்டியே விடை தேடுவோம்.

வாழ்வில், நமது குறிக்கோள்கள் பலவாயும், வேறு வேறாகவும் இருந்தாலும், எல்லோருடைய அடிப்படை நோக்கமும் சுகமான வாழ்க்கை என்பதுதான். பயமும், துயரும் இல்லாமல், மேன்மேலும் இன்பம் விழைதலே உயிர்களின் குறிக்கோள். அதற்குத்தான் அறிவையும் ஆற்றலையும் வளர்த்துக் கொள்கிறோம், பயன்படுத்துகிறோம்.

அப்படியாயின், ஏன் அறிவும், ஆற்றலும் கொண்டு செயலாற்றினாலும், விளைவுகள் எல்லாவற்றாலும், நமக்குச் சுகம் வருவதில்லை? ஒரு விளைவே, ஒருவரின் பார்வையில் உயர்வாயும், மற்றவர் பார்வையில் குறையாயும் ஏன் தெரிகிறது? தோல்வியில் நாம் ஏன் துவண்டு போய் விடுகிறோம்? சில சமயம், ஏன் சுகத்தைக் கூட நம்மால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை? லாட்டரியில் முதற்பரிசு வந்தது எனும் இன்ப அதிர்ச்சியில் இதயம் வெடித்து இறந்தவர்களைப் பற்றிய செய்தியும் இருக்கிறதே!

இதை எல்லாம் ஆய்ந்தால், அறிவும் ஆற்றலும் மட்டுமே, நமது அனுபவங்களை இனியதாக்குவதில்லை. நம்முடைய 'பாவனை' அல்லது 'அணுகு முறை' மிகச் சரியாக இருந்தால் மட்டுமே, செயலையும், பயனையும் முறையாகக் கையாள முடியும் எனவும், விளைவுகளைச் சரியாக ஏற்க முடியும் எனவும் புரிகிறது.

நாம் குழந்தைகளுடன் விளையாடும்போது, தோற்றாலும் துயரம் அடைவதில்லை. நாடகத்தில் நோயுற்றவனாக ரசித்து நடிப்பவருக்கும், தனது உடலில் நோய் வரும்போது, பயமும் துயரும் வருகிறது. ஏன்?

ஏனென்றால், ஒன்று விளையாட்டு, இன்னொன்று உண்மை. ஒன்று நடிப்பு, இன்னொன்று பாதிப்பு – இப்படித்தான் நாம் பார்க்கின்றோம். ஆனால், நம்முடைய விழிப்புநிலை அனுபவங்கள் எல்லாமே, ஒரு விளையாட்டுத்தான், ஒரு நடிப்புத்தான் என்று மட்டும் ஆகிவிட்டால்......! அப்புறம் தினசரி நாம் சந்திக்கும் இன்ப துன்பங்களை எல்லாம், நம்மால் மிகச் சுலபமாக ஏற்றுக் கொண்டுவிட முடியுமே! நம்முடைய அணுகுமுறை முற்றிலும் மாறிவிடுமே!

நாம் காணும் உலகத்தையும், அதில் நமது செயல்களையும், எப்படி விளையாட்டாகவும், நாடகமாகவும் நம்மால் அணுக முடியும்? இதை ஆய்வோம். நமது அணுகுமுறைகளுக்கு, நம்முடைய மனமே ஆதாரம். எனவே மனம்தான் இங்கே கவனிக்கப்பட வேண்டியது.

எல்லாச் செயல்களுக்கும், எல்லா விளைவுகளுக்கும் அவசியமானது 'சரியான அணுகுமுறை' என்பதாலும், அது நம்முடைய மனத்தையும், குணத்தையும் பற்றியது என்பதாலும், மனதை நாம் முதலில் சரியாகக் கையாள வேண்டும். மனமும், அணுகுமுறையும் எல்லாச் செயல்களுக்கும், விளைவுகளுக்கும் பொதுவானது என்பதால், அவற்றைச் சரியாகப் பண்படுத்த வேண்டும்.

சரியான அணுகுமுறை மட்டும் நமக்கு இருந்து விட்டால், விடிகின்ற ஒவ்வொரு நாளையும் நன்றாக நம்மால்

எதிர்கொள்ள முடியும். எந்த ஒரு வெற்றியும், தோல்வியும், எந்த விதத்திலும் நம்மைப் பாதிக்காமல், அடுத்தடுத்து எவை நமது இலக்கோ, அவற்றை நோக்கி நம்மால் போய்க் கொண்டே இருக்க முடியும். அதற்கான தயார் நிலையையே, வெற்றி பெற விழைபவர்கள் எல்லோரும், அதிகாலையிலேயே சிந்திப்பார்கள்.

அதிகாலை என்பது அமைதியானது. அதுவும் கனவுகள் ஏதுமின்றி ஆழ்ந்த துயிலில் இருந்து எழுகின்ற போது, மொட்டிலிருந்து மலரும் மலரைப் போல, அந்த அதிகாலைப் பொழுதில், நமது மனம் அலைச்சல் இன்றி அமைதியுடன் இருக்கும். அப்போதுதான் நம்மால், நமக்குள் எப்போதும் எழுகின்ற முதல் உணர்வினை, நம்மால் புரிந்து, உணர முடியும்.

நாம் எல்லோருக்கும் எழுகின்ற முதல் உணர்வு ‘நான்’ எனும் உணர்வுதான். அந்த உணர்வினாலேதான் மற்ற எல்லா அறிவும், ஆற்றலும் நம்மால் பிறகு அடையப்படுகின்றன. ஆனால், சட்டென வந்து விடும், இந்த ‘நான்’ எனும் உணர்வின் தன்மையை, நாம் சற்றும் யோசிப்பதில்லை. அது மட்டுமில்லாமல், அந்த ‘நான்’ எனும் உணர்வுக்கு விளக்கமாக, நமது உடலையும், மனதையும் தவறான அடையாளங்கள் என அறியாமல், பொருத்தி விடுகிறோம். அத்தவற்றினாலேயே, அறியாமையும் அதனால் விளையும் துயரங்களும் வந்து விடுகின்றன. அத்தவறு திருத்தப்பட வேண்டும் என்பதற்காகவே, ‘நான்’ எனும் அந்த உணர்வை நாம் சிந்திக்க வேண்டும் என்றும், அந்த உணர்வு எழும் அதிகாலை நேரத்திலேயே அதைப் பிடித்துக் கொள்வது எளிது என்பதையும் முக்கியமாகக் காட்டினார்கள் நமது பெரியோர்கள்.

எனவே ஆழ்துயிலில் இருந்து எழும் நேரத்தை, ‘நான்’ எனும் உணர்வு உதிக்கின்ற நேரமாகப் பார்க்கிறோம். அப்படியாயின், மறைபொருள் உண்மையாகிய பரம ரகசியம் என்ன என்ற கேள்விக்கும், ‘நான் யார்’ எனும் ஆய்வில் அறியப்படும் விடை எனவும் பொருள் கொள்ளலாம்.

முற்றிலும் கனவுகள் இல்லாது ஆழ்ந்து உறங்குவதும், அப்படியான ஆழ்ந்த உறக்கத்திலிருந்து விழிப்பதும், நமக்கு எப்போதும் கிடைப்பதில்லை. அறிவியலும் ஆய்ந்து சொன்னபடி, கனவுகளே பெரும்பாலும் வந்து போவதுமாய் இருக்கும் உறக்கத்தில், தினமும் குறிப்பிட்ட சில நேரங்களில், கனவுகள் எதுவும் இல்லாத ஆழ்ந்த துயில் இருக்குமாம்.

உதாரணமாக அதிகாலை மணி 3-4:30 எனும் காலம் பொதுவாக கனவற்ற, ஆழ்துயில் இருக்கும் காலம் எனவும் கணித்திருக்கிறார்கள். இந்த அதிகாலை நேரத்தை, 'பிரம்ம மூகூர்த்தம்' என மறைகள் அழைக்கின்றன. அதன் காரணம், இந்த அதிகாலை நேரம், 'பிரம்மம்' எனும் பரம ரகசியத்தைச் சிந்திக்க வேண்டிய நேரம் என்பது ஆகும். அந்த வகையிலே, மறைபொருள் உண்மையாகிய பரம ரகசியம் என்ன என்ற கேள்விக்கு, 'பிரம்மம்' என்பதும் ஒரு விடை என நாம் எடுத்துக் கொள்ளலாம்.

'நான்' எனும் நம் ஒவ்வொருவருக்குள்ளும் உயிர்த்திருக்கும் உணர்வுக்கும், அதே போல 'பிரம்மம்' என எல்லா உயிர்களுக்குள்ளும் உயிர்த்திருக்கும் உணர்வுக்கும், பொதுவாக 'ஆத்மா' எனும் பெயரை வேதாந்தம் வைத்திருக்கிறது. அப்படியானால், முக்கியமாகக் கருதப்படும் அதிகாலைப் பொழுது, 'ஆத்மாவின் தன்மை' பற்றிச் சிந்திக்கின்ற நேரம் என்றே ஆகிறது.

'தன்மை' என்பதனை சம்ஸ்கிருதத்தில் 'தத்துவம்' எனும் சொல்லால் குறிக்கலாம். 'தத்' என்றால் 'அது' எனவும், 'த்வம்' எனும் விகுதி 'தன்மை' எனவும், அதனால் ஒரு பொருளின் தத்துவம், அப்பொருளின் உண்மைத் தன்மையைக் குறிப்பது என்று ஆகும்.

மேலும், சம்ஸ்கிருதத்தில் 'தத்வம்' எனும் சொல்லுக்கு மற்றுமொரு விளக்கமாக, 'அது நீ' எனவும் பொருள் இருப்பதால், 'நான்' எனும் ஆத்மாவும், 'பிரம்மம்' எனும் பரமாத்மாவும் ஒன்று என மறைபொருள் உண்மையைக் காட்டுவர் பெரியோர்.

தமிழிலும் அவ்வாறே ‘தன்மை’ எனபதை ‘தன் மெய்’ எனக் கொண்டு, தனக்குள் ஒளிரும் ‘நான்’ எனும் ஆத்மாவே மெய், அதனால் அதுவே பிரம்மம் எனவும் சொல்லலாம் எனத் தோன்றுகிறது.

எனவே, மறைபொருள் உண்மை என நாம் அதிகாலைப் பொழுதிலே சிந்திக்கின்ற ரகசியம் ‘ஆத்ம தத்துவம்’ என்பதே ஆகும். அதாவது ‘நான்’ எனும் உணர்வின் தன்மை.

நாம் தேடிக் கொண்டிருப்பதோ, நம்முடைய அன்றாட வாழ்க்கைக்கு உதவக்கூடிய வகையில், நமது அணுகுமுறையை மாற்றிக் கொள்ளும் வழி. இதற்கு ஆத்ம தத்துவம் எப்படி உதவி செய்ய முடியும்?

இதற்குப் பதில் சொல்லும் வேதாந்தம், முதலில், வாழ்க்கையைப் பற்றிய நம்முடைய பார்வையை அப்படியே தலைகீழாகப் புரட்டிப் போட்டு விடுகிறது.

உதாரணமாக, விழிப்பே வாழ்க்கைக்கு ஆதாரம் என்றும், கனவு, துயில் அனுபவங்கள் எல்லாம் இடைச்செருகல் என்றும், அதனால் விழிப்புலக அனுபவத்தையே உண்மை என வைத்திருக்கும் நமது நம்பிக்கைகளை, வேதாந்தம் அப்படியே திருப்பி வைத்து விடுகிறது. நாம் விழிப்பே உண்மை எனச் சொல்வதை வேதாந்தம் ஆராயச் சொல்கிறது.

எது முதலில் இல்லையோ, அது எப்பொழுதும் இல்லை. எது முடிவில் இல்லையோ அது எப்பொழுதும் இருக்கவில்லை. இது ஒரு வேதாந்த உண்மை. அறிவியலின்படியும், மாற்றங்கள் எனும் தொடர் பாதிப்பினால், தோற்றங்கள் எதுவும் நிலையாய் இருப்பதில்லை. அதாவது, நாம் இடையிலே அடைவன எல்லாமே நிலையற்றவை.

கருவிலும் துயிலில்தான் நாம் தொடங்குகின்றோம். முடிவிலும் துயிலில்தான் முடிகிறோம். நம் அன்றாட வாழ்வும், துயிலில் தொடங்கித் துயிலில்தான் முடிகிறது. அதாவது அனுபவங்களிலும், துயில்தான் முதலில் இருக்கிறது. விழிப்பும் கனவும் இடைச் செருகல்களே. அதன் அடிப்படையில், வேதாந்தம் விழிப்பு நிலையையும், கனவு

நிலையையும், அதனால் அடையும் அனுபவங்களையும் நிலையற்றதாகவே கருத வேண்டும் என்று சொல்கின்றது. அவை தோற்றப் பிழைகள்.

வேதாந்தம் இதற்குச் சூடும் பெயர் ‘மித்யா’ என்பது.

மித்யா பொய்யல்ல, ஏனெனில் அது அனுபவத்தைத் தருகிறது. ஆனால் அது உண்மையுமல்ல, ஏனெனில், அது நிலையாக உள்ளதல்ல. மித்யா எனும் சொல்லுக்கு ‘அனுபவத்தைத் தந்தாலும், உண்மையில் இல்லாதிருப்பது’ என்று புரிந்து கொள்வோம். அதனால், ‘மித்யா’ எனும் சொல்லையே, மொழி பெயர்க்காமல் தமிழிலும் பயன்படுத்துவோம்.

ஆனால் உலகம் ஒரு மித்யா என்பதை எப்படி ஏற்பது! உலகமும், பொருட்களும் நம் கண்ணுக்குத் தெரிகின்றனவே!

தெரிகின்றனதான், நாம் ஒரு அனுபவ நிலைக்குள் கட்டுப்பட்டிருக்கும்போது! கனவு நிகழும்போது, யாரேனும் நம் கனவில் வந்து, ‘இதை எல்லாம் நம்ப வேண்டாம், இது மித்யா’ என்று சொன்னால் நம்மால் ஏற்க முடிகிறதா, இல்லையே! அப்படித்தான் விழிப்பு நிலையில் நாம் அனுபவிக்கும் உலகமும் ஒரு மித்யா. அந்த விழிப்பு நிலையில் நாம் இருக்கும் வரைதான், அந்த அனுபவங்கள் நம்மைப் பாதிக்கின்றன.

நமக்கோ, நம்முடைய வாழ்க்கையை இன்பமாய்க் கழிக்க வேண்டும் என்பது தானே குறிக்கோள், அப்படியிருக்க உலகம் மித்யாவா இல்லையா என்னும் ஆராய்ச்சி தேவையில்லைதான். எனினும் சில அடிப்படை வேதாந்தக் கருத்துக்களை அறிமுகம் கொள்வதில் நமக்கு வாழ்வில் பயன் இருக்கிறது.

எனவே சுருக்கமாக, உபநிடதங்களின் அடிப்படையில், கௌடபாதர், ஆதிசங்கரர் முதலான வேதாந்தப் பெருமுனிவர்கள் காட்டிய அத்வைதக் கருத்துக்களைப் பார்ப்போம்.

‘உலக வாழ்க்கை, கனவைப் போல ஒரு மித்யா’ என்பது அத்வைத உண்மை. மித்யாவின் பொருளை அறிந்த நமக்கு, கனவுலகம் ஒரு மித்யா என்பதை ஏற்பதில் ஒரு தடையும் இல்லை.

உதாரணமாக, கனவில் ‘இட நியதி’ இல்லை. அதாவது, கொள்ள முடியாத பெரிய பொருட்கள் - மலை, அருவி, யானை, சிங்கம் என – நமக்குள்ளேயே கனவில் வருகின்றன. அது உண்மையாக இருக்க முடியாது. மேலும், கனவில் அமெரிக்காவில் இருந்தாலும், விழித்துக் கொண்டால், முதலில் படுத்திருந்த இடத்திலேதான் எழுகின்றோம்.

கனவில் ‘கால நியதி’ என்பதும் இல்லை. அதாவது, பிறந்து வளர்ந்து, மணந்து, இறந்து என ஒருவரின் வாழ்க்கைச் சரிதமே கனவில் வந்து போகக் கூடும். அதுவும் உண்மையாக முடியாது. எனவே, கனவு ஒரு மித்யா என ஏற்பதில், நமக்கு எவ்விதத் தடையும் இல்லை.

ஆனால், கனவுலகைப் போலவே விழிப்புலகம் என எப்படி ஏற்பது!

கனவில் வரும் பொருட்களோ, அல்லது விழிப்புலகில் காணும் ‘கானல் நீர்’ போன்ற தோற்றங்களோ நமக்கு எந்தப் பயனும் தருவதில்லை. எனவே அவற்றையும் மித்யா எனக் கொள்ளலாம். ஆனால், விழிப்புலகில் காணும் பொருட்கள் நமக்குப் பயன் தருகின்றனவே! அவை எப்படி மித்யாவாகும்? எனவே பயன்படுகின்ற பொருட்கள் எல்லாம் மித்யா அல்ல என்றுதான் நாம் நினைக்கிறோம்.

இதற்கும் வேதாந்தம் கனவினைக் கொண்டே விளக்குகிறது.

கனவிலும், நமக்குக் கனவுப் பொருட்கள் பயனைத் தருகின்றன. கனவில் அப்பயனை நாம் அனுபவிக்கிறோம். கனவு நிலையை விட்டு வெளியே வந்த பிறகே, அதாவது விழிப்பில்தான், கனவு ஒரு மித்யா என உணரப்படுகிறது. கனவில் நன்றாகச் சாப்பிட்டிருப்போம், எனினும், விழித்தால் பசிக்கும். அதே போல, கனவில் பசிக்கும்போது, விழித்திருந்தபோது உண்ட உணவினால் பயன் ஏதும்

இல்லை. அதாவது, அந்தந்த உலகங்களுக்குள் மட்டுமே, அவ்வுலகப் பொருட்கள் பயனைத் தர முடியும். எனவே பயன் தருவதாலேயே ஒரு பொருள் மித்யா அல்ல எனச் சொன்னால், அதன்படி, கனவுலகம் மித்யா அல்ல என்றும் ஆகிவிடும். அதில் நமக்கு உடன்பாடு இல்லை அல்லவா!

சரி, கனவில் அனுபவமானது அந்தக் கனவு நேரத்தில் மட்டுமே இருக்கிறது. உலக வாழ்விலோ, நமக்குத் தொடர்ச்சியான அனுபவங்கள் வந்து கொண்டு இருக்கின்றன. அதனால், விழிப்புலகத்தைக் கனவுடன் ஒப்புமை கூற முடியாது என எண்ணுகிறோம்.

நாம் ஒரு பொருளை அறியும்போது, அவை இரு காலங்களால் உணரப்படுகிறது. வேதாந்தம் இதனை 'த்வயகால:' என அழைக்கிறது. அதாவது, 'தற்போது அறியப்படும் காலம்' மற்றும், 'முன்பு அறிந்திருந்த காலம்' என இரண்டு காலங்கள்.

ஒரு பொருளை தினமும் பார்க்கிறோம் என்றால், அப்பொருளுக்கு, 'தற்போது பார்த்துக் கொண்டிருக்கும் காலம்' மற்றும் 'முன்பெல்லம் பார்த்திருந்த காலம்' என இரண்டு கால அனுபவங்கள் இருக்கின்றன. இவற்றினாலேதான், தொடர்ச்சியாக அப்பொருளைப் பற்றிய அறிவும் நமக்கு இருக்கிறது.

கனவிலும் இப்படியான 'த்வயகாலம்' இருக்கிறது. ஆனால், அங்கே இக்காலங்களின் இடைவெளி மிகக் குறைவாய் இருப்பதால், இவ்விரண்டு காலங்களும், ஒன்றி, தற்போது மட்டுமே காணும் காலமாக, 'சித்த கால:' என அழைக்கப்படுவதாக இருக்கிறது. எனவே கனவு போன்றதே உலகம் என்பதை, இந்தக் காலநியதியைக் காட்டி மறுக்க முடியாது.

சரி, விழிப்புலகில், நமக்கு எல்லாம் தெளிவாக இருக்கிறதே, கனவில் தெளிவு இல்லாமலும், குழப்பமாகவும் அல்லவா உலகம் இருக்கிறது! அதனால் கனவை உலகிற்கு ஒப்பாகச் சொல்ல முடியுமா? இப்படியும் நமக்குத் தோன்றுகிறது.

கனவில் உடல், பொறி, புலனறிவுகள் என்பன இல்லை. மனம் மட்டுமே இருக்கிறது. ஆனால் விழிப்பு நிலையில், உடல், பொறி, புலனறிவுகள் எல்லாம் மனதிற்கு உதவியாக இருக்கின்றன. அதனால், விழிப்புலகில் பார்க்கும் பொருட்களில், நமக்கு அதிகத் தெளிவு இருக்கிறது. அவ்வாறு கருவிகளின் வலிமையால் தெளிவில் வேறுபாடு இருக்கிறதே தவிர, கனவுலகு போன்றதே விழிப்புலகம் என்று அத்வைத வேதாந்தம் சொல்கிறது.

கனவில் கனவுலகை உண்மையாய் அனுபவிப்பதுபோல, விழிப்புலகில் இருக்கும் வரை, விழிப்புலகத்தை உண்மையாய் அனுபவிப்பது இயற்கைதான். ஆனால் விழிப்பில் கனவை உதறித் தள்ளுவது போலவே, மற்றுமொரு மேலான-விழிப்பு நிலையாகிய ‘துரீயம்’ எனும் உயர்நிலையில், நம்மால் விழிப்புலகையும் ‘மித்யா’ எனத் தள்ளல் முடியும். அந்த நிலையை அறிந்து, ஆழ்ந்து அனுபவித்த பெரியோர்களே, நமக்கு இந்த உண்மையைத் தருகின்றார்கள்.

ஆனால் இம்மாதிரியான தத்துவ விசாரணைகளில் ஈடுபடவோ, அவற்றை ஆராய்ந்து ஏற்கவோ நாம் இன்னும் தயாராகவில்லையே! மேலும் இவைபற்றி எல்லாம் அறிந்து கொள்வதால், உலக வாழ்க்கையில் இருக்கும் நமக்கு என்ன பயன் வந்து விடப் போகிறது!

விழிப்புலகு உண்மையா, பொய்யா என்பது எப்படியோ இருக்கட்டும். ஆனால், அந்த விழிப்புலக அனுபவங்களை, அவை எப்படிப்பட்டவையாக இருப்பினும் ஏற்றுக் கொள்ளும் அறிவும், ஆற்றலும் கிடைத்தால் போதுமே! அதைவிட வேறு என்ன வேண்டும் நம்மைத் தயார்ப் படுத்திக் கொள்ள!

கனவு ஒரு மித்யா என்பதாலேயே, துணிவுடன், எந்த பயமும் இல்லாமல் உறங்கப் போகிறோம். கனவில் எது வந்தாலும், அதனால் பாதிப்பு இல்லாமல் இருப்பவன்தான் ‘நான்’ என நிச்சயமாக நினைக்கிறோம். அத்தகைய துணிவும், பயமின்மையும், எந்த விதமான பாதிப்பும் இல்லாமலும் உலக

வாழ்க்கையிலும் 'நான்' இருக்கிறேன் என்றால், அது எத்தனை வலிமை! அதற்காகவாவது, 'உலக வாழ்க்கையும் ஒரு மித்யா' என நாம் எடுத்துக் கொண்டு விட்டால், வாழ்க்கையை ஒரு விளையாட்டாகக் கருதி, அதனால் பாதிப்பு ஏதுமின்றி வாழலாமே!

அதற்கான உதவியைத்தான் 'ஆத்ம தத்துவம்' பற்றிய சிந்தனை நமக்கு ஏற்படுத்துகின்றது. தினமும் அதிகாலையிலேயே அந்தப் பேருண்மையைச் சிந்திக்கவும், துதிக்கவும், பணியவும் நாம் பழகிக் கொண்டால், உலக வாழ்க்கையை இனிதாக நடத்தவும், உண்மையைப் படிப்படியாகப் புரிந்து உயரவும், நம்மால் முடியும். எல்லா மனிதர்களுக்கும், தேவையானது இவ்வுண்மை.

அதனைச் சுட்டிக் காட்டுகின்ற இப்பாடல்கள், மிகவும் ஆழமான கருத்துக்களைக் கொண்டிருப்பதால், தக்க ஒரு ஆசிரியரிடம் பணிவுடன் கேட்டுப் படித்தறிவது ஒன்றே சாலச் சிறந்த வழி.

எனினும், உங்களுக்குள் அப்படிப்பட்ட ஒரு ஆர்வத்தை வளர்க்கவாவது பயன்படுமே என்ற நோக்கத்தாலும், அடியேனுடைய பயிலும் ஆர்வத்தினாலும், பகவான் ஆதிசங்கரர் அருளிய 'ப்ராத ஸ்மரண ஸ்தோத்திரம்' எனும் இந்நூல், தமிழிலும், ஆங்கிலத்திலும், எளிய மொழி பெயர்ப்பாக அமைக்கப்பட்டது.

இம்மொழிபெயர்ப்பு உரைநூல், படிப்போருக்குப் பயனும் நலனும் தரவேண்டும் என எல்லாம் வல்ல இறைவனின் திருவடிகளுக்கும், இயற்றி நடத்திச் செல்லும் குருவடிகளுக்கும், இவனின் பணிவான வணக்கங்கள்.

**மீ. ராஜகோபாலன்.**
நவம்பர் 2014

प्रातः स्मरामि हृदिसंस्फुरदात्मतत्वं
सच्चित्सुखं परमहंसगतिं तुरीयम् ।
यत् स्वप्नजागरसुषुप्तिमवैति नित्यं
तत् ब्रह्म निष्कलमहं न च भूतसंघः ॥ १ ॥

ப்ராத: ஸ்மராமி ஹ்ருதி$_3$ஸம்ஸ்பு$_2$ரதா$_3$த்மதத்வம்
ஸச்சித்ஸுக$_2$ம் பரமஹம்ஸக$_3$திம் துரீயம் |
யத் ஸ்வப்னஜாக$_3$ரஸுஷுப்திமவைதி நித்யம்
தத் ப்$_3$ரஹ்ம நிஷ்கலமஹம் ந ச பூ$_4$தஸங்க$_4$: || 1 ||

**ஐம்பொரு ளல்லா விழுதை**
**அகத்துக ளில்லா முழுதை**
**துய்விழி கனவாந் துயிலைத்**
**தொடரனு பவமாந் திறனை**
**உய்யுள வுணர்வாய் இன்பம்**
**உறுமுனித் துரீய நிலையை**
**வையுள வொளியான் தன்மை**
**வைகறை நினைக்கின் றேனே**

**கருத்து:**

அதிகாலையில் - உள்ளத்தில் தெளிவாகப் பிரகாசிப்பதும், எப்போதும் உள்ளதாயும், முழு அறிவாயும், அளவற்ற ஆனந்தமாயும், பரம ஹம்ஸர்களாகிய ஞானியர்கள் அடையும் துரீயம் எனும் மேலான உணர்வு நிலையிலே விளங்குவதாயும், (எல்லா உயிர்களும் அடையும்) விழிப்பு, கனவு, ஆழ்துயில் ஆகிய (மூன்று) அனுபவங்களையும் கடந்து, அந்த அனுபவங்களுக்கு எல்லாம் ஆதாரமாய், ஒரு தொடர்பினைக் கொடுக்கின்ற சாட்சியாகக் கோர்த்து விளங்கும் பிரம்மே அன்றி, (ஐந்துவிதமான) பூதப் பொருட்களின் தொகுப்பு அற்றதுமான - ('நான்' எனும்) ஆத்ம தத்துவத்தைச் சிந்திக்கின்றேன்!

**முதல் வரி:**

प्रात: (ப்ராத:) = அதிகாலையில்; स्मरामि (ஸ்மராமி) = நினைக்கின்றேன்; हृदि (ஹ்ருதி$_3$) = இதயத்தில்; संस्फुरद (ஸம்ஸ்பு$_2$ரத்) = தெளிவாக ஒளிர்கின்ற; आत्मतत्वं (ஆத்ம தத்வம்) = நான் எனும் ஆன்மா அறிவு

**இரண்டாம் வரி:**

सत् (ஸத்) = உள்ளது, நிலையானது; चित् (சித்) = உணர்வு, பேரறிவு; सुखं (ஸுக$_2$ம்) = பேரின்பம்; परमहंसगतिं (பரமஹம்ஸ க$_3$திம்) = பரம ஹம்ஸர் எனும் யோகியர் அடையும் ஒரு மேலான நிலையாகிய; तुरीयम् (துரீயம்) = துரீயம் எனும் மேலான விழிப்பு நிலை.

**மூன்றாம் வரி:**

यत् (யத்) = எது; स्वप्न: (ஸ்வப்ன) = கனவு; जागर: (ஜாக$_3$ர) = வெளியுலக அறிவு; सुषुप्त: (ஸுஷுப்தி)= ஆழ்துயில் நிலை; अवै इति (அவை இதி) = அறிகின்றதோ; नित्यं (நித்யம்) = எப்பொழுதும் தொடர்ச்சியாக;

**நாலாம் வரி:**

तत् (தத்) = அது; ब्रह्म: (ப்$_3$ரஹ்ம) = பிரம்மம்; निष्कलम (நிஷ்கலம்) = பிரிவற்ற முழுமையான; अहम् (அஹம்) = ஆன்மாவாகிய யான்; न च भूतसंघः (ந ச பூ$_4$தஸங்க$_4$:) = மேலும், பூதப் பொருட்களின் தொகுப்பு அல்ல;

## குறிப்பு:

முதற் பாடலின் முதல் வரியிலே, நம் இதயத்தில் மின்னலாக ஒளிர்கின்ற, ‘நான் எனும் உணர்வு’ என்பதான ‘ஆத்ம தத்துவம்’, நம்மால் அதிகாலையிலே சிந்திக்கப்பட வேண்டும் எனும் அறிவு காட்டப்பட்டது.

தெளிவும், எளிதில் மனதிற்குள் பதிப்பிக்கும் வலிவும் தருகின்ற காலம், அதிகாலை நேரம். அதிகாலை என்பதன் முக்கியத்துவத்தை முகவுரையிலேயே பார்த்திருக்கிறோம். எனவே இவ்வரியின் மற்ற சொற்களை ஆராய்வோம்.

சம்ஸ்கிருதச் சொல்லான 'ஹ்ருதயம்' என்பது 'ஹ்ருத் + அயம்' அதாவது, எது நமக்குள்ளே ஒரு மையமாக இருக்கின்றதோ, எவ்விடத்தில் 'நான்' எனும் உணர்வு முதலாக எல்லாம் தொடங்கி அடங்குகின்றதோ, அவ்விடத்தைக் குறிப்பது.

ஹ்ருதயம் நமது மையம், அது துல்லியமானது. உடலுள் அது எங்கே இருக்கிறது என்பது அறியப்பட முடியாதது. எனினும் ஒரு குறிப்புக்காக, ஹ்ருதயம் நமது வலது மார்பில் இருப்பதாக அனுமானிக்கும்படித் திருமறைகள் சொல்கின்றன. தமிழில், இச்சொல்லை, 'இதயம்' என மொழி பெயர்த்தால், அது நம்முடைய தசைகளால் ஆன இதய உறுப்பினைக் குறிப்பிடுகிறதோ எனத் தோன்றிவிடக் கூடும். எனவே இதனை 'உள்ளம்' அல்லது 'நெஞ்சம்' எனக் கொள்வோம். அந்த உள்ளம்தான் நமது மையம். அங்கிருந்துதான் 'நான்' எனும் முதல் உணர்வு ஒளிர்ந்து கொண்டிருக்கிறது.

'ஸ்மராமி' அல்லது 'நான் சிந்திக்கின்றேன்' என்றால், எதைச் சிந்திக்கின்றேன்? உள்ளத்துள், 'ஸம்ஸ்பு$_2$ரத்' அதாவது, நன்றாக ஒளிவிட்டுத் தெரித்த 'நான்' எனும் உணர்வைத்தான் சிந்திக்கிறேன்.

ஆழ்துயிலில் இருக்கும் பொழுது, இல்லாத இந்த 'நான்' இப்போது எப்படி முளைத்தது! அப்படி முளைத்த இந்த 'நான்தானே' சிந்தித்துக் கொண்டும் இருப்பது! அப்படியானால், எது சிந்தனை செய்கின்றதோ, அதனைப்பற்றியே சிந்திப்பதுதான் ஆத்ம தத்துவம் என இங்கே சுட்டிக் காட்டப்பட்டது.

ஆத்ம தத்துவத்தைச் சிந்தனையால் அறிந்துணர்வதை முதலாக எடுத்துக் கொண்டு, முதற்பாடலின் முதல் வரியில் பகவான் ஆதி சங்கரர் 'ஸ்மராமி' எனக் காட்டி இருக்கிறார்.

நான் யார்?

இந்தக் கேள்விதான் ஆத்ம தத்துவ விசாரம். அதாவது நான் எனும் உணர்வின் தன்மையை ஆராயச் செய்யும் கேள்வி. உபநிடதங்களில் இக்கேள்வியின் ஆய்வு வெகுவாக நடந்திருக்கிறது. இந்த ஒரு கேள்வியை வைத்தே வேதாந்த சாரமாகிய மறைபொருள் உண்மையை உணர்ந்து, உணர்த்தி அருளியவர் பகவான் ரமண மஹரிஷி ஆவார்.

பகவான் ஆதி சங்கரர், இப்பாடல்களில், ஆத்மாவின் தன்மையைப் பற்றிய முடிவினை மட்டுமே தந்திருக்கிறார். வேதாந்த விளக்கங்கள் எல்லாம் தரப்படாமல், ஆத்மாவின் தன்மை என்ன என்பதை இந்த மூன்று பாடல்களிலும், ஒரு சில அடைமொழிகளைக் கொடுத்து, சுட்டிக் காட்டுகின்றார்.

வேதாந்த அறிவை அடைந்தவர்களுக்கு, அந்த அடைமொழிச் சொற்களைக் கேட்டாலே, அதன் ஆழமான பொருள் விளங்கிவிடும். எனைப் போன்ற குறை மதி கொண்டவர்களுக்கு, அது எளிதல்ல. எனவே, ஆத்மாவின் தன்மையாக, ஆதி சங்கரர் காட்டுகின்ற அடைமொழிகளுக்கு என்ன ஆதாரம் என்பதைப் பாடல்களின் குறிப்புக்களாக, சுருக்கமாக ஆராய்ந்து, நாம் சுவையான சில உண்மைகளையும் புரிந்து கொள்வோம்.

அனுபவம்தான் வாழ்க்கை என்று பார்த்தோம். அனுபவம் என ஒன்று இருக்க வேண்டுமானால், அனுபவிக்கிறோம் எனும் ஒரு உணர்வும் இருக்க வேண்டும். அதாவது அனுபவ அறிவு இருக்க வேண்டும். அப்படியானால், 'நான் அனுபவிக்கிறேன்' என்றால், அந்த அனுபவிக்கும் நான் யார்?

உடல்தான் அனுபவிக்கிறது என்று வைத்துக் கொண்டால், இந்த உடல்தான் நான் என்று ஆக வேண்டும். ஆனால் உடலா

அனுபவிக்கிறது, இல்லையே! உடல் ஒரு கருவியாகத்தான் இருக்கிறதே தவிர, உடலுக்கு அனுபவிக்கும் அறிவு என்பது இயற்கையாக இல்லை. உடல் ஒரு சடப்பொருள். ஒருவரின் தூக்கத்திலும், மரணத்திலும், உடலின் சடத்தன்மை தெளிவாகத் தெரிகிறதே! அப்படியானால், உடல் என்பது நானாக இருக்க முடியாது. 'என்னுடைய உடல்' என்று நான், உடலை எனது உடமையாகக் கொள்ளலாமே தவிர, 'உடல்தான் நான்' என்பது ஒருபோதும் உண்மையாக முடியாது.

அனுபவங்கள் நமது புலனறிவில், மனதில் தெரிகின்றன. அப்படியானால், புலனறிவோ, மனமோதான் நானாக இருக்க முடியும் எனவும் நாம் எண்ணக்கூடும். ஆனால் புலனறிவு, மனம் இவைகளும் தானாக ஒளிர்வதில்லை. ஆழ்ந்து உறங்கும் போது, நமது புலனும் மனமும் ஒளி இல்லாமல் அடங்கிவிடுகின்றன. அவை மீண்டும் செயலாற்ற, வேறு எங்கிருந்தோ அறிவொளி தரப்படுகிறது. ஆகவே சடமான மனமோ, புலனோ நானாக இருக்க முடியாது. 'என் மனம்', 'என் புலன்' என அவைகளையும், என்னுடைய உடமையாக நான் கொள்ளலாமே தவிர, நான் அவை அல்ல.

ஆனாலும் உறங்கி எழும்போது, உறங்கினேன் எனும் அனுபவ சாட்சியாக ஏதோ ஒரு அறிவு சொல்கின்றது. மனமும், புலனும், உடலும் சடமாய் இருக்கும் உறக்க அனுபவத்தையும், முற்றும் அறிந்தபடி இருக்கும் அந்த அறிவுதான் எல்லா அனுபவங்களுக்கும் ஆதாரமாக இருக்கிறது. அந்த அறிவு விழிப்பு, கனவு, துயில் எனும் நமது மூன்று அனுபவங்களுக்கும் பின்னால் வெறும் சாட்சியாக இருக்கிறது. அப்படியானால், அனுபவிக்கின்ற நான், ஒரு அந்த அறிவின் வடிவமாகவே இருக்கின்றேன். அதாவது, நான் 'சித் ஸ்வரூபம்'.

சம்ஸ்கிருதத்தில் 'சித்' என்றால் அறிவுணர்வு. 'ஸ்வரூபம்' என்றால் உருவம். 'நான் யார்' எனும் விசாரணைக்கான முதல் பதிலாக, 'நான் சித் ஸ்வரூபம்' அதாவது, 'நான் அறிவு வடிவம்'

என்பது இதனால் சுருக்கமாகக் காட்டப்பட்டது. ‘சித்’ எனும் அறிவுவடிவம் ஆத்மாவிற்கு முதல் அடைமொழி.

மேலும் உலகில் நாம் எதனைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்றாலும், அப்பொருளைப் பற்றிய ஏதேனும் ஒரு அறிவு நமக்கு வேண்டும். உதாரணமாக ஒன்றின் பெயர், உருவம், சுவை, வாசனை, தொடும் அனுபவம் என ஏதேனும் நமக்கு இருந்தால்தான், அப்பொருளைப் பற்றி நம்மால் சிந்திக்க முடியும். ஆனால் ‘நான்’ எனும் உணர்வுக்கு இவை ஏதும் தேவையில்லை. இருட்டில் இருந்தாலும், ‘நான் இருக்கிறேன்’ எனும் உணர்வு நமக்கு இருக்கின்றதே! எனவே உருவமற்று, புலனால் அடைய முடியாத தன்மையுடன், ‘நான்’ எனும் ஆத்மா இருக்கின்றது.

உருவற்றது என்றால் என்ன பொருள்? உருவம் என்பது இருந்தால், அது ஒரு எல்லைக்கு உட்பட்டதாகத்தான் இருக்க வேண்டும். ஏனெனில், உருவம் என்பதைக் காட்ட நீள, அகல, உயர வேறுபாடுகள் தேவையல்லவா? எனவே எந்த ஒரு உருவத்திற்கும், எல்லை என்பது இருந்தாக வேண்டும். ஆனால் ஆத்மா உருவற்றதாய் இருக்கிறது என்றால், அது எல்லையற்றதாய், முடிவற்றதாய் இருக்கிறது. சம்ஸ்கிருதத்தில் ‘அந்தம்’ என்றால் முடிவு, ‘அனந்தம்’ என்றால், முடிவற்றது. எனவே ஆத்மா என்பது அனந்தமாய் இருக்கிறது.

மேலும் ஒரு பொருளுக்கு எல்லை இல்லை என்றால், அது முற்றிலும் சுதந்திரமானது என்பதும், முற்றிலும் நிறைந்தது என்பதும் விளங்கும். முழு நிறைவு தான் பேரானந்தம், உண்மைச் சுகம். அப்படியானால், ஆத்மாவின் தன்மை, முழுமையான ‘சுகம்’. இதுவே இரண்டாம் அடைமொழி. ஆத்மா அறிவுணர்வாயும், எல்லையற்ற ஆனந்தமுமாய் ‘சித்சுகம்’ என விளங்குகிறது.

‘விளங்குகிறது’, ‘இருக்கிறது’, ‘உள்ளது’ என்றெல்லாம் ஆத்மாவைச் சொன்னால், கால, தேச, குண மாற்றங்கள் எதுவும் இல்லாமல் ஆத்மா நிலையாக இருக்கிறது என்பதாகும்.

காலத்தினால், தூரத்தினால், குணத்தினால் மாற்றங்களை அடைந்து கொண்டே இருக்கும் எந்த ஒரு பொருளும், எப்பொழுதும் நிலையான ஒரு உண்மையாக இருக்க முடியாது. எனவே இம்மாற்றங்களால் பாதிக்கப்படாமல் இருக்கின்ற ஒன்றே உண்மை. அதுவே 'சத்' என சம்ஸ்கிருத அடைமொழியால் அழைக்கப்படுவது. எனவே ஆத்மா, 'சச்சிதானந்தம்' என எப்பொழுதும் உள்ளதாய், முழுதுணர்வாய், முழுநிறைவாய் விளங்குகின்றது. இதனையே இரண்டாம் வரியில் ஆத்மாவின் தன்மை 'சத்சித்சுகம்' எனக் காட்டினார் பகவான் ஆதி சங்கரர்.

மேலும் ஆத்ம தத்துவத்தை மட்டுமே நாடி, அதனை நன்கு உணர்ந்த ஞானியருள், மிகவும் உயர்ந்தவன் யாரெனில், அடைந்த ஆத்ம ஞானத்திலேயே எப்போதும் நிலையாக இருப்பவன். அப்படி இருப்பதுதான் 'ஞான நிஷ்டை' எனப்படுவது. அது ஒரு பெரும் தவம். ஏனெனில் தூய அறிவைப் பெறுவது மட்டும் முக்கியமல்ல, அந்த அறிவிலேயே ஒழுகி இருப்பதுதான் மிகவும் கடினம். அத்தகைய நிஷ்டைகளை அடைந்த ஞானிகளுக்குப் 'பரமஹம்ஸன்' என்று பெயர். அவர்கள் எப்போதும் ஆத்மனை உணர்ந்து, ஆத்ம நினைவிலேயே ஆழ்ந்து இருப்பார்கள். அவர்களது அந்த மேலான நிலை, நமக்கு எல்லாம் ஒரு சாதாரண உறக்கத்தைப் போலத் தெரிந்தாலும், அது உறக்கமல்ல, ஒப்பறிய சமாதிநிலை. இது 'யோக ஸ்மாதி' எனும் மனதை லயப்படுத்தி இருக்கின்ற நிலையும் அல்ல.

'மனோலயம்' என்பது, மனதினை ஏதோ ஒன்றில் மட்டுமே நிலைப்படுத்தி மனத்தின் சேட்டைகள் ஏதும் இல்லாமலிருக்கும் நிலை. உறக்கம் என்பதும் 'மனோலயம்'தான். யோகம், தியானம் முதலிய பயிற்சிகளால், இப்படி மனோலயமாய் இருக்கும்பொழுது, நாம் ஆசைகள் இல்லாமலும், செயல்கள் இல்லாமலும் இருக்கிறோம். அதனால், வினைப்பளுவும், அதன் விளைவான 'சம்சாரம்' எனும் துயரமும், மனோலயத்தின் போது நமக்கு ஏற்படுவதில்லை. எனவே மனோலயம் அடைவது முக்கியமான படிதான்.

ஆனால், எப்படி உறக்கத்திலிருந்து எழுந்தவுடன் பழையபடியே நாம் மீண்டும் உலகில் இயங்குவோமோ, அதுபோலவே 'மனோலயத்தால்' மட்டுமே இருக்கும் யோக சமாதி முடிந்தால், நாம் முந்தைய குணங்களால், முன் போலவே உழலும் நிலைக்குத் திரும்பி விடுவோம். உதாரணமாக, கோபத்தை விலக்காத ஒருவன், மனோலயம் கற்று யோக சமாதி அடைந்தாலும், யோக சமாதி முடித்து எழுந்தால், மீண்டும் கோபத்தைத்தான் கொள்கிறான். எத்தனை புராணக் கதைகளில், தவத்திலிருந்து எழுந்த யோகிகள், தவறான செயலைச் செய்வதையும் படித்திருக்கிறோம்!

ஆனல், இங்கே பரமஹம்ஸர்களின் கதி எனக் காட்டப்பட்ட நிலை, 'மனோலயம்' என்பதால் அல்ல, அது 'மனோநாசம்' என்பதால். மனம் அழிந்த நிலை என்பதால்! மனம் எப்படி அழியும்? மனதை அழித்தால், உணர்வு எப்படி வெளிப்படும்! இதுவும் மிகவும் நுணுக்கமான கருத்து.

'மனோநாசம்' என்பதன் உண்மைப் பொருள், மனதில் இருக்கும் 'அஞ்ஞானம்' எனும் அறியாமையை விலக்குதல். இந்த அறியாமை, தெரியாமை என்பதையும், ஒன்றை மற்ற ஒன்றாகத் தவறாகத் தெரிந்திருத்தல் என இரண்டு தவறுகளையும் குறிக்கும். இந்த 'அஞ்ஞானம்' ஏற்படுத்தும் பாதிப்புக்கள்தான் 'அத்தியாசம்' எனும் மயக்கங்கள். வேற்றுமையைப் பெரிதுபடுத்தி, பொய்யை உண்மை என்று இருத்தலே 'அத்தியாசம்' கொடுக்கும் அடையாளங்கள்.

எனவே, ஆத்மாவே உண்மை எனவும், மற்றதெல்லாம், அதன்மேல் ஏற்றிவைக்கப்பட்ட மித்யா எனவும் அறிந்து கொண்டவனுடைய மனம், லயப்பட்டாலும், அல்லது லயப்படாமல் உலகில் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு உலக வாழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாலும், அவற்றில் பற்று ஏதும் இல்லாமல் இருக்கும். எல்லாவற்றையும் பார்த்தாலும், அவற்றால் எந்தவிதப் பாதிப்பும், அவற்றின் மேல் எந்தவிதப் பந்தமும் இல்லாமல் இருக்கும். அந்த நிலையில்தான், மனம் என்பது நாசமடைந்து விட்டது. அது

வெறும் காட்சிக்கான சன்னலைப்போல, ஆத்மாவின் சாட்சிக்கு ஏதுவாக இருக்கிறது. எல்லாம் அறிந்து, அந்த அறிவிலேயே ஆழ்ந்து இருக்கும் அந்த உயரிய நிலைதான் super-conscious-state எனும் பரஞான நிலை. அதுவே 'துரீயம்'. அதுவே பரம ஹம்ஸர்களின் குறிக்கோள். அந்த மேலான பரஞான நிலையைத்தான் 'யானும் அதிகாலையில் சிந்திக்கிறேன்' என்று பாடலின் இரண்டாம் வரியில் காட்டப்பட்டது.

நமக்கு ஏன் அத்தகைய துரீயம் எனும் அனுபவ நிலை கிடைப்பதில்லை? இதற்கு, வேதாந்தம் தரும் பதில் மிகவும் வியப்புத் தருவதாக இருக்கிறது.

ஆத்மாவை உணர்ந்து, அதிலேயே இருக்கின்ற சுக அனுபவத்தை 'ஆத்மானுபவம்' அல்லது 'பிரம்மானுபவம்' எனலாம். அந்த அனுபவம் நம் எல்லோருக்கும், எப்போதும் இருந்து கொண்டுதான் இருக்கின்றது! ஒரு சில நொடிகளாவது, நம்மில் பலரும் அதனை அவ்வப்போது அனுபவித்துக் கொண்டுதான் இருக்கிறோம். ஆனால், அதுதான் ஆத்மானுபவம் என உணருகின்ற அறிவோ, அதனையே மேலும் பிடித்துக் கொள்ள வேண்டும் எனும் உறுதியோ நமக்கெல்லாம் இல்லை. 'நான் யார்' எனும் தொடர் சிந்தனையின் உறுதியினாலேயே, நம்மாலும் ஆத்மானுபவத்தைப் பிடித்துக் கொள்ளும் வலிமையும், உணர்ந்து கொள்ளும் அறிவும் கிடைக்கும். இதனைக் காட்டுவதே இப்பாடல்களின் குறிக்கோள்.

'துரீயம்' எனும் இந்த மேலான நிலை என்ன, அதை எப்படி அடைவது எனத் தெரிந்து கொள்ள, முதலில் நாம், நமக்குக் கிடைக்கும் தினசரி அனுபவ நிலைகளைப் பற்றிச் சற்று சிந்திக்க வேண்டும். இதுவே மூன்றாம் வரியில் சுட்டிக் காட்டப்பட்டது.

ஆத்ம தத்துவத்தை விளக்க, வேதாந்தம் எடுத்துக் கொள்ளும் பல வழிகளில் ஒன்று, நமது அனுபவங்களை மூன்று விதமாக ஆராய்ந்து உணர்த்துதல். இது 'பிரஹதாரண்ய' மற்றும்

‘சாண்டோக்ய’ உபநிடதங்களில் விரிவாகவும், ஆழமாகவும் தரப்பட்டுள்ளன.

விழிப்பு-நிலை என்பது நாம் விழித்துக் கொண்டு உலகில் செயலைச் செய்தும், அனுபவித்துக் கொண்டும் இருக்கும் உலக அனுபவ நிலை. இது சம்ஸ்கிருதத்தில் ‘ஜாக்ரதா’ எனப்படுகிறது. இந்த விழிப்பு நிலையில், உலகை அனுபவிக்க, நம் உடலும், மனமும் முதன்மைப் படுத்தப்பட்டு இருக்கின்றன. உலகத்தில் எல்லா அனுபவங்களையும், மனதாலும், உடலாலும்தானே ஏற்கிறோம்! உடலும், புலனும், மனமும், உலகில் பிறந்த நமக்கு, அனுபவங்களைக் கொண்டு சேர்க்க அளிக்கப்பட்ட கருவிகள்.

கனவு-நிலை என்பது நமக்கெல்லாம் ஏற்படும் மற்றொரு அனுபவமாகும். உறங்கும்போது சில சமயம், மனம் மட்டும் தொடர்ந்து விழித்துக் கொண்டே இருந்து, எண்ண ஓட்டங்களை எழுப்பி, கனவு எனும் அனுபநிலையைத் தரும். சில சமயங்களில், விழிப்பு-நிலையிலும், உடலும், புலனும் அயர்ந்திருக்கும்போது, ‘பகல் கனவு’ ஏற்படுவதும் உண்டு. இவ்வாறு மனதில் மட்டுமே விளங்கும் கனவு அனுபவம், ‘ஸ்வப்ன:’ எனப்படுவது. அத்தகைய கனவு அனுபவத்தில் நம்முடைய மனம் மட்டுமே இருக்கிறது. வெளியுடலோ, புலனறிவோ இல்லை.

விழிப்பும் இன்றி, கனவும் இன்றி, ஆழ்ந்து உறங்கும் நிலையில், அதாவது ஆழ்துயிலில், உடலும் மனமும் முற்றும் ஒய்ந்து விடுகின்றன. அப்போது புலன் அறிவும் இல்லை. ‘நான்’ என நாம் பொதுவாக எதனை அடையாளப்படுத்திக் கொள்கிறோமோ, அந்த ஆணவமும் இல்லை. அப்போது, ஒரு அறியாமைதான் விளங்குகிறது. இந்த ஆழ்துயில் அனுபவ நிலையை ‘ஸுஷுப்தி’ என வேதாந்தம் அழைக்கிறது.

விழிப்பு, கனவு, ஆழ்துயில் என இவ்வாறு நமது அனுபங்களை மூன்றாகப் பிரித்த வேதாந்தம், இந்த ஒவ்வொரு அனுபவங்களையும் அனுபவிக்க, ஒவ்வொரு உடலை நமக்குள் முதன்மைப் படுத்துகின்றது. இப்படிச்

செய்வது எல்லாம், இவ்வனுபவங்களை நாம் ஆராய்ச்சி செய்ய உதவத்தான்.

உதாரணமாக, வல்லுடல் அல்லது 'ஸ்தூல சரீரம்' என்பது நம்மால் பார்க்கப்படுகின்ற தசை, எலும்பு எனக் கலந்து படைக்கப்பட்ட நம்முடைய உடல். மெல்லுடல் அல்லது 'சூக்ஷ்ம சரீரம்' என்பது யாராலும் பார்க்கப்பட முடியாத, ஆனால் நம்முள்ளேயே உணரப்பட முடிகின்ற உடல். அதாவது, மெல்லுடல் என்பது, நமக்குள் இருக்கும் துல்லியமான புலனறிவுகளும், 'அந்தக்கரணம்' அல்லது உட்கருவிகள் எனப்படும் மனம், சித்தம், புத்தி, 'நான் இந்த உடல்தான்' எனும் அகங்காரம் ஆகியவற்றின் கலவை.

மேலும், எல்லா விளைவுக்கும் ஒரு மூலகாரணம் இருக்க வேண்டும் என்ற நியதியால், நாம் அடையும் வல்லுடல், மெல்லுடல் எல்லாம், நம்முடைய முந்தைய வினைகளின் விளைவுகள் எனும் கர்ம விதியினை நமது சாத்திரங்கள் வைத்திருக்கின்றன. அதன் அடிப்படையில், நமது வல்லுடலுக்கும், மெல்லுடலுக்கும் காரணமாக, வினையுடல் அல்லது 'காரண சரீரம்' என ஒரு நுண்ணுடலும் இருக்கிறது. இந்த மூன்று உடல்களின் கலவைதான், பிறவியில் நாம் சுமக்கும் உடல்கள். ஆனால் பொதுவாக, நாமெல்லாம், 'நான்' என்பதற்கு, வெளியில் தெரியும் வல்லுடலைத்தான் அடையாளமாக வைத்திருக்கிறோம்.

சுருக்கமாகச் சொல்லப்பட்ட இந்த மூன்று அனுபவ உடல்களைத் தெளிவாகப் புரிந்து கொள்ள ஏராளமான விளக்கங்களை எல்லாம் வேதாந்தம் கொடுக்கின்றது. இங்கே, நம்முடைய நோக்கம், அனுபவங்களுக்கும், உடல்களுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது என்பதைப் பார்ப்பது மட்டுமே.

'ஜாக்ரதா' அல்லது விழிப்பு-நிலை அனுபவத்திற்கு நம்முடைய வல்லுடல் முதன்மைப்படுத்தப்பட்டு, அத்துடன் மெல்லுடலும் இணைந்துள்ளது. நமக்கு ஏற்படும் அனுபவங்களுக்கு, அவை துன்பமோ, இன்பமோ, அவைக்கான அடிப்படைக் காரணம், நம்முடைய வினைப்

பயனே என்பதால், வினையுடலும் நம்முடைய விழிப்பு-நிலை அனுபவங்களுக்கு காரணமாக இருக்கிறது. அதனால், ‘ஜாக்ரதா’ அனுபவங்கள் நமக்குள் மிக அழுத்தமாகப் பதிகின்றன.

‘ஸ்வப்னா’ எனும் கனவு-நிலை அனுபவத்திலோ வல்லுடல் இல்லை. அதன் ஒளியை, அதாவது அதன் அறிவு நிலையை, ஆத்மா மறைத்து வைத்து விட்டது. மெல்லுடலின் மனம் மட்டுமே இன்னும் ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. அந்த மெல்லுடல், முன்பு பெற்ற அனுபவங்களை ஒட்டி, தனக்குள்ளேயே ஒரு கனவு உலகைப் படைத்து, அதனை மனதுக்குள் அனுபவித்துக் கொள்கிறது. கனவினை அனுபவிக்கும் போது, கனவு அனுபங்கள் உண்மையாக இருந்தாலும், அந்தக் கனவுலகு, கனவு இருக்கும் வரையிலேதான் உண்மை எனவும் நாம் ஏற்றுக் கொள்கிறோம்.

ஆழ்துயில் என்பதோ வல்லுடலும், மெல்லுடலும் முற்றும் தத்தம் அறிவாகிய ஒளியினை இழந்து விட்ட நிலை. அவற்றின் சக்தியை ஆத்மா தன்னுள் இழுத்துக் கொண்டுவிட்டது. அப்போது வெளியுலகமும் இல்லை. கனவுலகும் இல்லை. ஒன்றும் இல்லாமல், அதே சமயம், ஏது வரும் எனும் தெளிவோ, அறிவோ இல்லாமல் நாம் இருக்கின்றோம். அப்போது நம்முடைய வினையுடல் மட்டுமே, நாம் செய்த, செய்கின்ற எல்லா வினைகளும், ஆத்ம தத்துவத்தை உணராத அறியாமையினாலேதான் என்பதால், ‘அறியாமை’ எனும் போர்வையினாலே போர்த்தப்பட்டுக் கிடக்கிறதாம். வல்லுடலுக்கும், மெல்லுடலுக்கும் வினைகளுக்கேற்ப அடுத்தடுத்து, அனுபவங்களை ஏற்படுத்த வேண்டும் எனும் நோக்கம் மட்டுமே ஒரு விதையாக விளங்க, வினையுடலை மட்டும் அறியாமைப் போர்வைக்குள் சுமந்து நாம் ஆழ்துயிலில் இருக்கின்றோம்.

விழிப்பு, கனவு, துயில் எனும் இவ்வனுபவங்களை அனுபவிப்பவன் வெவ்வேறு ஆளாக இருந்தால், எப்படி இந்த அனுபவங்களை எல்லாம், சேர்த்தும், தொடர்பு

படுத்தியும் ஒருவனால் கூற முடிகிறது, முடியாது அல்லவா! அறியாமையில் கிடக்கும் துயிலையும், ‘நான் நன்றாகத் துயின்றேன். அந்த அனுபவம் சுகமாக இருந்தது’ எனவும் எப்படி ஒருவனால் கூற முடியும்! எனவே மூன்று உடல்களையும் தாண்டி, மூன்று அனுபவங்களையும் தாண்டி, ஒரு சக்தி இருக்க வேண்டும். அதுவே ஆத்மா.

முண்டோக உபநிடதம், ஒவ்வொரு உடலுக்கும் ஒரு பெயரையும் இட்டு, அந்த மூன்று நபர்களும், உண்மையில் ஆத்மாவாகிய ஒன்றின் மேல் ஏற்றி வைக்கப்பட்ட மித்யாவே எனக் காட்டுகின்றது. இந்த மூன்று அனுபவங்களுக்கும் மூன்று விதமான உடல்கள் இருப்பதாய் நமக்கு விளங்குவதற்காகவே காட்டினாலும், இம்மூன்று அனுபவங்களையும் அனுபவிப்பவன் ஒருவனே எனவும் உறுதி செய்கின்றது.

ஆழ்துயில் சுகமாய் இருக்கிறது என்றால், அது எந்த மாதிரியான சுகம்?

அது மனதால், புலனறிவால், உடலால் அடையப்படும் சுகமாக இருக்க முடியாது, ஏனெனில், மனமோ, புலனோ, உடலோ ஆழ்துயிலில் இல்லை. அப்படியானால், அந்தச் சுகம் அடையப்படும் சுகம் இல்லை. நம்முடைய இயற்கையான ஆனந்த நிலை. உடல், மனம், அறிவு எல்லாம் அடங்கி விட்ட துயிலில், ஆத்மா மட்டுமே இருப்பதால், ஆனந்தம் இயற்கையாய் இருக்கிறது. அது ‘சத்சித்சுகம்’ எனும் ஆத்மாவின் இயற்கைச் சுகம்.

அப்படிப்பட்ட ஆத்ம சுகத்தை, ஆழ்துயிலுக்குப் பின்னே வரும் விழிப்பில் ஒரு அனுமானமாகத்தான் நம்மால் உணர முடிகிறது. ஆனால், ஆத்ம சுகத்தை, எப்பொழுதும், அதாவது விழிப்பு, கனவு, ஆழ்துயில் எனும் எல்லா நிலைகளிலேயும் எவரால் உணர்ந்திருக்க முடியுமோ, அவரே பரமஹம்ஸர். அப்படி விளங்கும் பரமஹம்ஸர்களின் நிலைதான் ‘துரீயம்’ எனும் மேலான பரஞான நிலை. அதுதான் எல்லா அனுபவங்களுக்கும் அறிவொளி தருவதாக, ஆனால், எல்லா

அனுபவங்களையும் வெறும் சாட்சியாக மட்டுமே பார்த்துக் கொண்டு இருப்பதான ஆத்ம நிலை.

துரீயம் என்பதை மேலான நாலாம் நிலை என ஒரு குறிப்புக்காகச் சொன்னாலும், உண்மையில் அது ஒரு நிலை அல்ல, அதுவே முடிவு. அதுவே 'நான் ஆத்மாவே' என நிலைத்திருக்கும் கதி. இவ்வாறு, ஆத்மா மூன்று அனுபவநிலைகளுக்கு அப்பாற்பட்டும், அவற்றுக்கு எல்லாம் ஒரு ஆதார சாட்சியாகவும் இருப்பது எனும் கருத்தையே பாடலின் மூன்றாம் வரி காட்டுகின்றது.

ஆத்மா, மூன்று கூறுகளான ஒருவரது உடல்களினூடே கோர்த்து ஒளிர்ந்து, சாட்சியாக இலங்குவது போலவே, உலகில் எல்லா உடல்களிலேயும் கோர்த்து ஒளிர்கின்றது. அப்படி உலகில் கோர்த்து இலங்கும் ஒளியே 'பிரம்மம்' அல்லது 'பரமாத்மா'. அதனால், பிரம்மமும், ஆத்மாவும் ஒன்றே. அப்படி உணராமல், 'நான்' என்பது வெளி, வளி, தீ, நீர், மண் எனும் ஐந்து இயற்கைப் பொருட்களின் (பஞ்ச பூதங்களின்) தொகுப்பால் ஆக்கப்பட்ட உடலே என நினைப்பது தவறு. 'நான்' எனும் ஆத்மா, பகுக்கப்பட முடியாதது. தொகுக்கப்பட முடியாதது. ஏனெனில், அது ஈரற்று முழுமையாய் நிறைந்து இருப்பது.

இவ்வாறு நாலாம் வரியிலே காட்டி, 'ஜீவ-பிரம்ம ஐக்கியம்' அல்லது 'ஈரற்ற ஆத்ம தத்துவம்' எனும் பரம ரகசியத்தைச் சிந்திக்க, பகவான் ஆதிசங்கரர் தூண்டுகின்றார். ஆத்ம தத்துவத்தை அதிகாலையிலே சிந்தித்து, நான் இந்த வெறும் உடலோ, அணுத்திரளின் திரட்டோ அல்ல, எல்லா உயிர்களிலும் கோர்த்திருக்கும் பிரம்மமே, அது எப்பொழுதும் உள்ளதும், உணர்வும், சுகமுமாய் இருப்பது என்று சிந்திக்க வேண்டும் என்பதே முதற்பாடலில் தரப்பட்ட பேருண்மை.

प्रातर्भजामि मनसा वचसामगम्यं
वाचो विभांति निखिला यदनुग्रहेण ।
यन्नेति नेति वचनैर्निगमा अवोचु -
स्तं देवदेवमजमच्युतमाहुरग्र्यम् ॥ २ ॥

ப்ராதர்ப$_4$ஜாமி மனஸாம் வசஸாமக$_3$ம்யம்
வாசோ விபா$_4$ந்தி நிகி$_2$லா யத$_3$னுக்$_3$ரஹேண |
யன்னேதி நேதி வசனைர்னிக$_3$மா அவோசு -
ஸ்தம் தே$_3$வதே$_3$வம் அஜம் அச்யுதம் ஆஹுரக்$_3$ர்யம் || 2 ||

**பெய்மொழி பேசா ததனை**
**பெருமனம் காட்டா ததனை**
**செய்புலன் மொழிக ளேற்றிச்**
**சேதனம் ஆற்றா வருளை**
**அய்யிலை யிலைமா மறைவை**
**அறிவொளி ஒளியைப் பிறவா**
**மையுள தழியா துண்மை**
**வைகறை துதிக்கின் றேனே**

## பொருள்:

அதிகாலையில் - எதை மனதாலும், வாக்காலும் விளக்க முடியாதோ, எதனுடைய கருணையினால், எல்லா வாக்கும் (அதாவது வாக்கு முதலான புலனறிவுகளும் மனமும்) ஒளிர்கின்றனவோ, எதனை, 'இது அல்ல, இது அல்ல' என்று (பொய்யெனத்) தள்ளி, வேதங்கள் (உண்மையெனக்) காட்டுகின்றனவோ, எது எல்லா அறிவிற்கும் ஒளியினைத் தருவதாய், பிறப்பு-இறப்பு இல்லாததாய், என்றும் உள்ளதாய் இருப்பது என்று கூறப்பட்டதோ, அந்த - ஆத்மாவை நான் துதிக்கின்றேன்.

**முதல் வரி:**

प्रात: (ப்ராதர்) = அதிகாலையில்; भजामि (ப$_4$ஜாமி) = துதிக்கின்றேன்; मनसाम् (மனஸாம்) = மனதால்; वचस् (வசஸாம்) = வாக்கால்; आगम्यम् (அக$_3$ம்யம்) = அடையமுடியாத;

**இரண்டாம் வரி:**

वाचो (வாசோ) = வாக்குகளும்; विभांति (விபா$_4$ந்தி) = ஒளிர்கின்றது; निखिला (நிகி$_2$லா) = அனைத்து; यदनुग्रहेण (யத்$_3$ அனுக்$_3$ரஹேண ) = எதன் கருணையினால்;

**மூன்றாம் வரி:**

यन् (யன்) = எந்த (உண்மையை); नेति नेति (நேதி, நேதி) = இது அல்ல, இது அல்ல; वचनै (வசனைர்) = வரிகளால்; नीगमा: (நிக$_3$மாக) = வேதங்கள்; अवोचन् (அவோசன்) = விளக்குகின்றது;

**நாலாம் வரி:**

स्तं (ஸ்தம்) = அதை; देवदेवम (தே$_3$வதே$_3$வம்) = (அறிவுகளின்) ஒளியின் ஒளியை; अजम (அஜம்) = பிறப்பு இல்லாததை; अच्युतम् (அச்யுதம்) = அழிவு இல்லாததை; आहुर् (ஆஹுர்) = இப்படிச் சொல்கிறார்கள்; अग्र्यम् (அக்$_3$ர்யம்) = என்றும் உள்ளது;

## குறிப்பு:

முதற் பாடலிலே ‘அதிகாலையில் சிந்திக்கிறேன்’ எனத் தொடங்கிய பகவான் ஆதி சங்கரர், இரண்டாம் பாடலில், ‘அதிகாலையில் துதிக்கிறேன்’ எனத் தொடங்குகிறார்.

‘சிந்தித்தல்’ என்பது அறிவால் ஆய்ந்துணருதல். ‘துதித்தல்’ என்பது மனதால் ஆழ்ந்துணருதல். எனவே சிந்திப்பதால்,

முதற்பாடலில் பகுத்தறியப்பட்ட ஆத்ம தத்துவம், இரண்டாம் பாடலில், துதிப்பதால் தொகுத்துணரப் பெருகிறது.

இப்பாடலில், முதல் வரியில் ஆத்மா புலனறிவுக்கு எட்டாமல் இருப்பது எனும் உண்மை காட்டப்படுகிறது.

முன்னேயே காட்டியபடி, 'நான்' எனும் உணர்வு - பார்த்தல், கேட்டல், நுகர்தல், ருசித்தல், தொடல் எனும் - புலனறிவுகளால் காட்டப்பட முடியாத உணர்வு. நமக்கு 'நான்' என நம்மை உணர்ந்து கொள்ள எந்தப் புலனும் தேவை இல்லை அல்லவா? இருட்டில் இருந்தாலும், நமக்கு நாம் இருப்பது தெரிகிறதே! இதைத்தான் முதல் வரியில் மனதாலோ, வாக்கு முதலான அறிவாலோ காட்டப்பட முடியாதது எனக் கூறப்பட்டது

இரண்டாம் வரியில், மனம், வாக்கு முதலான புலன்களால் அறியப்பட முடியாததாகிய ஆத்மாவே மனம், புலன் முதலிய சடப்பொருளுக்கும், அறிவாகிய ஒளியைத் தந்து உயிர்ப்பிக்கின்றது எனக் காட்டப்பட்டது.

'யத்$_3$ அனுக்$_3$ரஹேண' – அதாவது எதனுடைய கருணையால், நாம் இந்த உடலில் உயிர்த்திருக்கிறோமோ, அதுதான் ஆத்மா. உயிர் என்பதல்ல ஆத்மா. உயிர் என்பது சடவுடலுக்கு அறிவொளியைத் தந்திருக்கின்ற நிலை. அது ஒரு விளைவு மட்டுமே. அந்த விளைவுக்குக் காரணமான மூலமே ஆத்மா. இந்த நுணுக்க உண்மை உணரப்பட வேண்டும்.

மூன்றாம் வரி, பொதுவாக உபநிடதங்கள் ஆத்ம தத்துவத்தை விளக்க எடுத்துக் கொள்ளும் ஒரு வழியினைச் சுட்டிக் காட்டுகிறது. அது ஆத்மா அல்லாதவற்றை, 'இது அல்ல, இது அல்ல' எனக் கண்டு கழிப்பதன் மூலம், மிஞ்சியிருக்கும் தள்ள முடியாத உணர்வையே, ஆத்மாவாக உணர்ந்து கொள்வதாகும்.

எல்லாவற்றையும் காட்டுவதே ஒளி என்றால், அந்த ஒளியையே எப்படி ஒளியினால் காட்ட முடியும்? வாக்காலும், மனதாலும் உணர்த்தப்பட முடியாதது ஆத்ம தத்துவம்

என்றால், அப்புறம் அதனை எப்படி மொழியாலும், மனதாலும் காட்டிக் கொடுக்க முடியும்?

‘நான்’ என்ற உணர்வும், அதை ஒட்டி உயிர்ப்பித்த மனமும், புலனறிவும், ஆத்மாவின் அருளால் மட்டுமே எழுவன என்பதும், அந்த ஆத்மாவை மனதாலும், புலனாலும் அறிய முடியாது என்பதும் காட்டப்பட்ட பின், வேதங்கள், ஆத்மாவை உணர்வதற்கு ஒரு வழியினைத் தருகின்றன. அது, இருளை ஒளி அல்ல என விலக்குவதன் மூலம் ஒளியை உணர்வது எப்படியோ, அப்படியே ஆத்மா அல்லாதது எது எனத் தெளிந்து அவற்றை விலக்கினால், ஆத்மா மட்டுமே மிஞ்சி நிற்கும் எனும் ஒரு வழிதான்.

ஆத்மா அல்லாதன எல்லாம், சம்ஸ்கிருத மொழியில் ‘அநாத்மா’ எனப்படும். எதெல்லாம் மனதால், புலனால் அடையப்படுவனவோ, அதெல்லாம் அநாத்மா என்பதாகிறது. அப்படியானால், நாம் அடைவன எல்லாம் அநாத்மா. உடமைகள் எல்லாம் அநாத்மா. எனவே அவற்றை எல்லாம், ‘இது அல்ல, இது அல்ல’, அதாவது ‘நேதி, நேதி’ என, தள்ளிக் கழித்துக் கொண்டே வந்தால், வெளிப்பொருட்கள், உள்ளறிவு என எல்லாம் ஒவ்வொன்றாகத் தள்ளப்பட்டு, தள்ள முடியாத தனிப்பொருளாக எது மிஞ்சி இருக்கிறதோ, அதுவே ஆத்மா என உணரமுடியும்.

‘நேதி, நேதி’ என இருமுறை சொன்னது ஏனோ?

முதல் தள்ளல், நமக்கு வெளியில், நாம் தேடி அடையும் பொருட்களை உண்மையல்ல எனத் தள்ளுதல்; அதாவது உலகப் பொருட்களை நாடுவதன் மூலம் நிலையான உண்மையினை அடைய முடியாது என ஆத்ம விசாரணை செய்தல்.

இரண்டாம் தள்ளல், நமக்குள்ளேயே நம் புலனிலும், மனதிலும் காணும் பொருட்களிலும், நிலையான உண்மை இல்லை எனத் தள்ளல். அதாவது, புலனறிவாலும், மனதாலும் அடையும் இன்பங்களும் உண்மையல்ல என ஆத்ம ஆராய்ச்சி செய்தல்.

இப்படி முதல் மூன்று வரிகளிலே ஆத்மா புலனறிவுக்கோ, மனதுக்கோ எட்டாதது எனவும், ஆதலால் தனையற்ற எல்லாவற்றையும் தள்ளி, தள்ள முடியாத தன்னையே ஆத்மா என உணரவேண்டும் எனவும் காட்டிய பகவான் ஆதி சங்கரர், நாலாம் வரியில், ஆத்மாவின் தன்மையை மேலும் சில அடைமொழிகளால் காட்டுகின்றார்.

'தே$_{3}$வதே$_{3}$வம்' எனும் சொல்லுக்குத் தெய்வங்களின் தெய்வம் எனப் பொருள் கொள்ளலாம். ஆயினும், 'தே$_{3}$வ' என்பதன் சரியா பொருள், ஒளி என்பதே. அதாவது அறிவு.

சாத்திரங்களிலே, நமக்குள் இருக்கும் பார்த்தல், கேட்டல், ருசித்தல், உண்டல், ஜீரணித்தல் என இருக்கும் பலவிதமான அறிவு ஒவ்வொன்றிற்கும், ஒரு ஒளிச்சக்தி அல்லது தேவதை காரணமாக இருக்கிறது எனக் காட்டி, அந்தத் தெய்வங்களின் அருளால், அவ்வறிவுச் சக்திகள் பிரகாசிக்கட்டும் என்றெல்லாம், நமது ஸநாதன தர்மநெறியிலே, பல துதிப்பாடல்களும் இருக்கின்றன.

'முப்பத்து முக்கோடி தேவர்கள்' என்பதும், அப்படி ஒரு எண்ணிலடங்கா கணக்கினால் துதிப்பதும், உயிர்களில் விளங்கும் பலவித அறிவின் ஒளிகளைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான். எனவே, 'தே$_{3}$வதே$_{3}$வம்' எனும் சொல்லின் பொருள், 'அறிவின் அறிவு' அல்லது 'ஒளியின் ஒளி' எனப் பொருளாகும். அதுவே ஆத்மா.

இப்படிச் சொல்வதால் இரண்டு முக்கிய உண்மைகள் வெளிப்படுகின்றன.

வேறுபட்டிருக்கும் எல்லாவிதமான உயிர்களுக்குள்ளும், விளைந்திருக்கும் எல்லாவிதமான அறிவுகளுக்கும் ஆதாரமான அறிவு ஆத்மா ஒன்று மட்டுமே என்றால், அந்த ஆத்மா ஈரற்ற ஒன்றாகத்தான் இருக்க வேண்டும்.

இரண்டாவது, அப்படி உயிர்த்திருக்கும் அறிவுக்கெல்லாம் அறிவொளி கொடுப்பது ஆத்மாவே என்றால், அப்படிக் கொடுப்பதும், கொடாமல் இருப்பதும் ஆத்மாவினாலேயே முடியும். அதாவது ஆத்மாவின் கருணையினால் மட்டுமே,

நமக்கு உயிர்ப்பும், உயிர்த்தவருக்குள் ஆத்மாவைப் அறியும் நாட்டமும், அதில் முயற்சியும், முயற்சியால் பயனும் விளைய முடியும்.

எனவே உயிர்ப்பித்தும், உயர்வித்தும் அருளும் அச்சக்தி, பிறப்பு, இறப்பு எனும் மாறுபாடுகளையும் கடந்ததாக இருக்க வேண்டும். இதனைக் காட்டவே, நாலாம் வரியில், ‘அஜம்’ (பிறப்பற்றது), ‘அச்யுதம்’ (அழிவற்றது) என்றெல்லாம் ஆத்மாவுக்குத் திருமறைகள் அடைமொழிகள் தருவதாக பகவான் ஆதி சங்கரர் காட்டியிருக்கின்றார்.

प्रातर्नमामि तमसः परमर्कवर्णं
पूर्णं सनातनपदं पुरूषोत्तमाख्यम् ।
यस्मिन्निदं जगदशेषमशेषमूर्तौ
रज्ज्वां भुजंगम इव प्रतिभासितं वै ॥ ३ ॥

ப்ராதர் நமாமி தமஸ: பரமர்கவர்ணம்
பூர்ணம் ஸனாதனபத₃ம் புரூஷோத்தமாக்யம் ।
யஸ்மின்னித₃ம் ஜக₃த₃ஶேஷமஶேஷ மூர்தௌ
ரஜ்ஜ்வாம் பு₄ஜங்க₃ம இவ ப்ரதிமாஸிதம் வை || 3 ||

**மையிருள் இலதாய் இலதாய்**
**மாகதிர் ஒளியாய் முழுதாய்**
**எய்யுரு இலக்காய் எதுவாய்**
**என்றுள நிதியாய் முதலாய்**
**பொய்யுல காட்டும் மிகையாய்**
**புரிகயிற் றுழலும் அரவாய்**
**வைத்திடுந் திடமாம் உண்மை**
**வைகறை பணிகின் றேனே**

## பொருள்

அதிகாலையில் – எது இருளுக்கு வேறானதாயும், இருளகற்றும் கதிரொளியாயும் இருக்கிறதோ, எது முழு நிறைவானதாயும், முக்கியக் குறிக்கோளாயும், முதன்மையானதாயும் இருக்கின்றதோ, எதனுடைய நிறைவில், மிச்சம் இல்லாது எல்லா உலகங்களும், கயிற்றில் கற்பனையால் ஏற்றி வைக்கப்பட்ட பாம்பினைப் போல உறுதியாகத் தோன்றுகின்றனவோ, அந்த - ஆத்மாவைப் பணிகின்றேன்.

**முதல் வரி:**

**प्रातर्नमामि** (ப்ராதர் நமாமி) = அதிகாலையில் பணிகிறேன்;

**तमसः** (தமஸ:) = இருளுக்கு; **परम्** (பரம்) = வேறானது; **अर्कवर्णं** (அர்க வர்ணம்) = (சூரிய) ஒளிச்சுடர்;

**இரண்டாம் வரி:**

**पूर्णं** (பூர்ணம்) = நிறைவானது; **सनातनपदं** (ஸனாதன பத$_3$ம்) = என்றும்-உள்ள இலக்கு; **पुरूषोत्तम्** (புருஷோத்தம:) = முதன்மையானவன் (என்ற); **आख्यम्** (ஆக்யம்) = பெயரைக் கொண்டது;

**மூன்றாம் வரி:**

**यस्मिन्निदं** (யஸ்மின்) = எதனிடத்தில்; **सीएइदं** (இத$_3$ம்)= இந்த; **जगदशेषम** (ஜக$_3$த்$_3$ அஶேஷம்) = (மிச்சம் இல்லா) எல்லாப் படைப்புக்களும்; **अशेषमूर्तौ** (அஶேஷ மூர்தௌ) = (ஆத்மாவாகிய,) நிறைவான உருவத்தில்;

**நாலாம் வரி:**

**रज्ज्वां** (ரஜ்ஜ்வாம்) = கயிற்றில்; **भुजंगमः** (பு$_4$ஜங்க$_3$ம:) = பாம்பு; **इव** (இவ ) = போல; **प्रतिभासितं वै** (ப்ரதிபாஸிதம்)= ஏற்றப்பட்ட உறுதியான தோற்றம்;

## குறிப்பு:

முதற் பாடலிலே ‘அதிகாலையில் சிந்திக்கிறேன்’ எனவும், இரண்டாம் பாடலில், ‘அதிகாலையில் துதிக்கிறேன்’ எனவும் தொடங்கிய பகவான் ஆதி சங்கரர், இறுதியான இந்த மூன்றாம் பாடலில் ‘அதிகாலையில் பணிகிறேன்’ எனத் தொடங்குகிறார்.

அதிகாலையில் எழுந்த உடனேயே, இவ்வாறு ஆத்ம தத்துவத்தை, முதலில் அறிவால் சிந்தித்தும், பிறகு மனதால் துதித்தும் அதனால் முறையே பகுத்தறிவும் தொகுத்துணர்வும் அடையும் ஒருவன், இறுதியாக, ஆத்ம தத்துவத்திலேயே பணிவு கொள்வதன் மூலம், விழிப்பு-நிலையில் உலகில் செய்யும் செயல்களிலும், அனுபவங்களிலும், ஆத்மாவின் ஈறற்ற பேருண்மையை மறக்காமல், 'எல்லா உடமைகளும் எனதல்ல' எனும் பணிவுடன் தன் கடமையைச் செய்ய முடிகிறது.

'நமாமி' எனும் சொல்லுக்குப் பணிதல், வணங்குதல் என்பது பொருள்.

'ந மம' என்பது, 'என்னுடையது அல்ல' என எல்லா உடமைகளையும் தியாகம் செய்கின்ற உறுதியே ஆகும். அப்படிப் பணிவதால், உலகத்தில் கடமை ஆற்றும் போதும், அதன் விளைவுகளை ஏற்கும் போதும், எல்லாச் செயலும், விளைவும், அந்தந்த அனுபவத்தின் போது உண்மையாய் இருப்பினும், அவை யாவும் நிலையற்ற தோற்ற மாயை என்பதால், அவற்றைத் தியாகம் செய்யும் உறுதி, 'வைராக்யம்', ஏற்படுகிறது.

அதனால் உலக விவகாரங்களில் ஈடுபடும்போது அவற்றை வெறும் விளையாட்டாகவே ஏற்கும் பக்குவமும், அவற்றினால் வெற்றி-தோல்வி என்றோ, சுகம்-துக்கம் என்றோ, விருப்பு-வெறுப்பு என்றோ எந்தவிதப் பாதிப்புக்களும் இல்லாமல், அப்பாதிப்புக்கள் எல்லாம் ஒரு அனுபவ நிலையில் மட்டுமே உண்மைபோல் இருக்கும் மித்யா எனவும் அறிய முடிகிறது.

எனவே உலக வாழ்க்கையில் ஈடுபடும்போது, ஆத்மா ஒன்றே சத்தியம், மற்றதெல்லாம், மித்யா என்ற தூய அறிவுடன் இருந்து, மித்யா தரும் அனுபவங்களை, ஒரு பொய்யான பாதிப்பாக ஏற்க முடிகிறது.

இவ்வாறு உலகத்தைச் சந்திக்க, சரியான உறுதியையும் ஞானத்தையும் தந்து ஒருவனைத் தயார் செய்வதற்கு, மூன்றாம் பாடல் உறுதுணை செய்கிறது.

இப்பாடலின் முதல் வரி, அறியாமையைக் கடந்தது ஆத்மா எனக் காட்டுகின்றது.

இருள் என்பது அறியாமையைக் குறிப்பது. ஒளியோ அறிவு. அந்த ஒளி, இருளாகிய அறியாமைக்கு அப்பாற்பட்டது. ஆனால் அதுவே அறியாமையையும் காட்டி, அந்த அறியாமையை அகற்றுவது.

எப்படி ஒளி இருட்டைக் காட்டும்? சூரியனால் கூட இருட்டைக் காட்ட முடியாது. ஆனால் நம்முடைய அறிவினால், இருட்டு என்பதையும் பார்க்க முடிகிறது, அதுவே நம் அறிவின் ஒளி. அந்த ஒளிதான் இருளையும், இருளைக் களையும் சூரியனையும் காட்டுகிறது. அறிவுக்கு ஒளியைத் தரும் ஆத்மாவே அறியாமை எனும் இருளை 'விளக்குவதாயும்', 'விலக்குவதாயும்' விளங்கும் விளக்கு.

இரண்டாம் வரியில் ஆத்மாவிற்கான மற்றும் சில அடைமொழிகளும் காட்டப்படுகின்றன.

ஆத்மா வரையறுக்கப்படாதது என முதற்பாடலில் பார்த்தோம்.

பொதுவாக காலம், தேசம், குணம் எனும் மூன்றும்தான் ஒரு பொருளின் எல்லையை நிர்மாணிக்கிறது. ஒரு பொருளைக் காலத்தினாலோ, இடத்தினாலோ, குணத்தினாலோ ஏற்படும் மாற்றங்களை ஒட்டியே, விளக்கி விடலாம் என்றால் அப்பொருள் நம்முடைய அறிவின் எல்லைக்கு உட்பட்டதாகி விடும். அதாவது அப்பொருட்கள், மாற்றங்களில் மாட்டிக் கொண்டு 'மித்யா' என்றாகிவிடும்.

ஆனால் நிறைவான பொருள் என்பது, இந்தக் கால, தேச, குண மாறுபாடுகளால் எவ்விதப் பாதிப்பும் அடையாமல், எல்லையற்றதாய் இருப்பதாகும். எல்லை என்பது இல்லை என்றால், அந்தப் பொருள் எல்லா இடத்திலும் நிறைந்து இருக்கிறது என்பது ஆகிறது. அப்படி முழுமையாய் நிறைந்து

இருப்பதை, சம்ஸ்கிருதத்தில் ‘பூரணம்’ என்று அழைப்பர். அப்படியானால், ஆத்மா எனும் ‘நான்’ பூரணம்.

மேலும் மாற்றங்களை விளைக்கும் காலம், தேசம், குணம் எனும் மூன்றும், நம்முடைய மனதின் எண்ண ஓட்டங்களினாலேயே விளைபவை. எண்ணங்கள்தான் பெயர், உரு, குணம் ஆகிய வேறுபாடுகளை விளைவிக்கிறது. எனவே இவை எல்லாம் மனதில் அடக்கம். காலத்தின் மற்றொரு அளவுகோளே ‘தேசம்’ அல்லது வெளி. கால தேச குண மாற்றங்களை விளைக்கும் மனதாலும் ஆத்மாவை அடைய முடியாது என்பதால், ஆத்மா காலம், தேசம், குணம் ஆகிய பாதிப்புக்கள் இல்லாமல் சுதந்திரமாக, எல்லையற்று இருக்கிறது. அதனால், ‘பூரணம்’ எனும் அடைமொழி ஆத்மாவுக்கு மட்டுமே பொருத்தமாக உள்ளது.

இரண்டாம் வரியில், ஆத்மா ‘என்றும் இருப்பது’ என்பதால், அதனை ஒரு முறை உணர்ந்தால்கூட, அதை நாம் ஒருபோதும் இழப்பது இல்லை எனக் காட்டப்படுகிறது. ‘ஸனாதன பத₃ம்’ எனும் சொல்லுக்கு ‘என்றும் இருக்கும் நிதி’ எனப் பொருள் கொள்ளலாம்.

வேதாந்தத்தின்படி, அடையப்படுவன எல்லாம் நிலையானவை அல்ல. எதையெல்லாம் முயற்சியாலோ, முன்வினையாலோ நாம் உலகில் அடைகின்றோமோ, அவை எல்லாம் நிலைக்காது. அதாவது, அடையப்படுவன என எல்லாம், இடையில் வந்து போவன. அவை முதலிலும் இல்லை. முடிவிலும் இல்லை. நம் உடலும் அடையப்பட்டதுதான். எனவேதான் அது நிலையற்றது. உலக வாழ்வில் அடையும் பொருள், புகழ் என எல்லாமும் அப்படியே நிலையற்றதுதான். அறிவும் அடையப்படுவது என்றால், அதுவும் அழிந்து போகும். சொர்க்கப் பதவி, நரகத் துயரம் என அடைவதும், மாறிப் போகும். அப்படியானால் ‘ஆத்மாவை அடைதல்’ எப்படி நிலையாக முடியும்!

ஆத்மா என்பது அடையப்படுவது அல்ல. அது உணரப்படுவது. ஏனென்றால், ஆத்மா என்பது ஏற்கனவே நம்மால் அடையப்பட்ட பொருள், ‘சித்த வஸ்து’.

தெளிவதற்கான ஒரு எளிய எடுத்துக்காட்டு.

ஒருவர், தன் தலையின் மேலேயே தன்னுடைய மூக்குக் கண்ணாடியை வைத்துக் கொண்டு அதைக் தேடிக் கொண்டிருக்கிறார். அவரிடம், தேடும் பொருள் ஏற்கனவே அவர் தலை மேலேயே இருக்கிறது என்ற அறிவை உணர்த்தினாலே போதும், எந்த முயற்சியும் இல்லாமல், அவர் அடைய வேண்டிய பொருள் உணரப்படுவதாலேயே, அது அவர்களால் அடைந்ததாக ஆகிறது.

இதைப் போலவே, ஆத்மா என்பது எப்போதும் இருப்பது. அதை உணராமல் தவிக்கும் நமக்கு, அதை உணரும் அறிவு வந்த உடனேயே, ஆத்மா ஏற்கனவே அடையப்பட்டதாக ஆகிறது. அதனால்தான், அத்தகைய ஞானம் ஒன்றினாலேயே, ஆத்ம தத்துவத்தை உணரமுடியும் என வேதங்கள் கூறுகின்றன. அந்த உணர்வு நம்முடைய புற அறிவின் முடிவிலேயே கிடைக்கிறது என்பதாலேயே, 'வேத அந்தம்' அல்லது 'அறிவின் முடிவு' என வேதாந்த நூல்கள் அழைக்கப்படுகின்றன. அறிவின் முடிவிலேதான் ஆத்ம ஒளியை உணரமுடியும். மாணிக்கவாசகர் சிவபுராணத்தில், 'வேதம் கெடுத்தாண்ட வேந்தன்' என அறிவின் முடிவைக் கொடுக்கும் ஆத்மனையே துதிக்கிறார்.

ஆத்மாவை உணர்தலே முழுமை தருவது, விடுதலை அளிப்பது என்று வேதாந்தம் கூறுகின்றது. அந்த முழுமை, ஆத்ம ஞானம் ஒன்றினாலேயே அடையப்படுகிறது அப்படியானால் கர்மங்களையும், கர்மங்களைச் செய்வதற்கான தரும நியதிகளையும் சொல்லி வந்த வேதம், ஆத்ம சுகம் அடைவதற்கு ஞானம் மட்டுமே வழி, மற்றவைகள் தேவையில்லை எனச் சொல்லி இருக்கிறதே என ஐயம் வருகிறது. இதையும் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆத்ம ஞான விசாரம் செய்யவும், ஆத்மனை முற்றும் உணர்ந்து முழுமைச் சுகத்தைப் பெறவும், நாம் முதலில் நம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டும். அந்தத் தயார் நிலை என்பதுதான் ஞானப்படிகளிலே ஏறுவதற்கான தகுதியை அடைந்த நிலை.

காலம் காலமாக, பிறவிகள் பலவற்றிலும், தரும நெறி தவறாமல் கடமைகளைச் செய்து வருதலால், அடைய வேண்டிய தெளிவான மனமும், திடமான அறிவும் ஒருவர் பெற்று, அவ்வுயர்ந்த பண்பின் நல்லழுத்தத்தால், எப்பொழுதோ ஒரு நேரத்தில், ஆத்மாவின் உண்மையை உணரும் தாகம் அவருக்குள் பெருக்கெடுக்க, அவரும் இப்பாடல்களில் காட்டியது போல, அதிகாலை முதல் அயரும் வரை, ஆத்ம தத்துவத்தையே, மதியால் சிந்தித்து, மனதால் துதித்து, உடலால் பணிந்து வாழ்வார்.

அத்தகையோரே, தங்களது அயராத முயற்சிகளின் பலனாகவும், ஆத்மாவின் கருணையாலும், ஆத்ம ஞானத்தை உணர்வார்கள். அதன்பின், 'ஞான நிஷ்டை' என, யாவும் ஆத்மனே எனும் பேரறிவுடனே இருப்பார்கள். அத்தகைய சீலர்களால் மட்டுமே, அதற்கப்புறம் எந்த கர்மங்களும் இல்லாமல், ஞானம் ஒன்றாலேயே முழுநிறைவான விடுதலையை அடைய முடியும். அவர்களுக்கு மட்டுமே உலகியல் கடமைகளோ, அறங்களோ தேவையில்லை.

மற்ற எல்லோருக்கும், கடமைகள், நியதிகள் என அறம் வழுவாமல் ஒழுகும் வாழ்க்கை நெறிகளே முதற்படிகள். அவற்றை முதலில் கடந்து, அதனூடேயே, பக்தி, யோகம் என நற்பண்புகளை வளர்க்கும் தர்மப் பாதையிலே மேலும் உயர்ந்து, இவற்றின் விளைவால், மனத் தெளிவும், உறுதியும் பெற்று, ஆத்ம ஞானத்திற்கான அடிப்படை அறிவையும், தகுதியையும் கொண்டவர்களாக உயர வேண்டும்.

இரண்டாம் வரியில் காட்டப்பட்ட மற்றொரு அடைமொழி 'புருஷோத்தம:' என்பது. இதன் பொருள், உயிர்களில் முதன்மையானவன் என்பது ஆகும்.

நாம் பொதுவாக, புருஷன் எனும் சொல்லுக்கு மனிதன் என்று பொருள் கொள்கிறோம். அதுவல்ல இங்கு காட்டப்படும் உண்மை. இதுவும் முக்கியமாக உணரப்பட வேண்டியது.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், பகவத் கீதையில் அர்ச்சுனனுக்கு அருளும்போது, மூன்று வகையான புருஷன் எனக்

காட்டுகின்றார். முதலில் உலகம் என்பது ‘காரிய புருஷன்’, அதாவது உலகமே எல்லாச் செயல்களுக்கும் விளைநிலமாக விளங்குகின்றது. மற்றொன்று, உலகங்களைப் பலவாறான தோற்றங்களாகக் காட்டும் மாயா சக்தி எனும் ‘காரண புருஷன்’.

இந்தக் காரிய, காரணங்களைத் தாண்டி, இவற்றுக்கெல்லாம் ஆதாரமாய் இருக்கும் பரமாத்மாவை ‘உத்தம புருஷன்’ என்று பகவத் கீதை அழைக்கின்றது. ‘உத்தம’ எனும் சொல் ‘மிகவும் மேலானது’ எனும் பொருளைத் தருவதாகும். ‘உத்தம புருஷன்’ என்பதே ‘புருஷ உத்தமன்’ அல்லது ‘புருஷோத்தமன்’ எனவும் ஆகும்.

இச்சொல்லின் அமைப்பில், சம்ஸ்கிருத மொழி இலக்கணத்தின் ஒரு கருத்தையும் நாம் அறிந்து சிறக்கலாம்.

ஆங்கில இலக்கணத்தில் 1ST person, 2nd person and 3rd person என்று அழைக்கப்படுவதே, தமிழ் மொழி இலக்கணத்தில், ‘நான்’ என்பது ‘தன்மை’ எனவும், ‘நீ’ என்பது ‘முன்னிலை’ எனவும், மற்றன எல்லாம் ‘படர்க்கை’ எனவும் சொல்லப்படும். ஆனால் சம்ஸ்கிருத மொழி இலக்கணத்தில், படர்க்கைதான் ‘பிரதம புருஷ:’ என முதலாவதாய் இருக்கிறது. எதிரில் இருப்பவர்களை இரண்டாவதாக ‘மத்யம புருஷ:’ எனக் காட்டுகிறது. ஆனால், தன்னைக் காட்டுபோது, ‘உத்தம புருஷ:’ என்று காட்டுகின்றது. ஒருவேளை, உண்மையும், உயர்வுமான ‘ஆத்மாவே நான்’ என்பதால்தானோ, சம்ஸ்கிருத இலக்கணம், ‘நான்’ என்பது ‘உத்தம புருஷன்’ எனக் கொள்கிறது! அதுபோலவே, தமிழும், ‘நான்’ என்பது தன்மை எனச் சொல்லி, உண்மையில் அது ‘தன் மெய்’ என நம்மை உணரச்சொல்கிறதோ எனவும் தோன்றுகிறது.

பாடலின் இறுதி வரியில், ஆத்மாவிற்கும் உலகிற்கும் உள்ள உறவு எத்தகையது என்ற வேதாந்த உண்மையினை, பகவான் ஆதிசங்கரர் சுட்டிக் காட்டுகின்றார். இதற்கு ஒரு வேதாந்த உதாரணத்தைக் குறிப்பிடுகிறார்.

‘மித்யா’ எனும் கருத்தை விளக்க வேதாந்தம் எடுத்துக் கொள்ளும் சில உதாரணங்களில் ஒன்றுதான் ‘கயிற்றிலே பாம்பினைக் கண்டு மருளும் நிலை’.

தொலைவில் கிடக்கும் ஒரு கயிற்றை, அது கயிறு எனும் உண்மையினை அறியாதவன், அது பாம்பு என்று தவறாகப் புரிந்து கொள்ளும்போது, உண்மையிலேயே பாம்பினைப் பார்ப்பதால் வரும் உணர்ச்சிகளினால் பாதிக்கப்படுகிறான். ஆனால் அது கயிறு எனும் உண்மை தெரியவரும்போது, அது பாம்பல்ல என உணர்ந்து கொள்கிறான். கயிற்றைப் பற்றிய உண்மை அறிவு வருவதற்கு முன்னால், பாம்பு என்பது அவனைப் பொறுத்தவரையில் அக்கயிற்றிலே இருக்கின்றது. ஆனால், பாம்பு உண்மையும் அல்ல. அப்படி உண்மையல்லாத தோற்ற மாயை, உண்மையைப் போல இருக்கின்ற நிலையை, ஆதி சங்கரர் ‘ப்ரதிபாஸிதம்’ எனும் சொல்லால் குறிக்கின்றார்.

அவர் எடுத்துக் கொண்ட ‘கயிற்றில் பாம்பு’ எனும் உதாரணத்தின் குறிக்கோள் மித்யாவைப் பற்றிப் புரிய வைக்கத்தான்.

மித்யா என்பது, உண்மையைப் போல நம்மைப் பாதிக்கலாம் என்பதும், மித்யா, மற்றொரு உண்மைப் பொருளை ஆதாரமாகக் கொண்டே ஏற்படமுடியும் என்பதே இங்கு நாம் புரிந்து கொள்வது. உலகங்களும், ஆத்மா எனும் உண்மையை ஆதாரமாகக் கொண்டு, அதன் மேல் ஏற்றி வைக்கப்பட்ட தோற்ற மாயையே என்பதே இதனால் சுட்டிக் காட்டப்பட்டது.

எளியதான இந்த எடுத்துக்காட்டை வேறு வகையிலும் முக்கியப்படுத்தி, பல சான்றோர்கள், மித்யா வாதத்தை எதிர்த்தும், ஏற்றும் வாதிட்டிருக்கிறார்கள். அவ்விதமே ஆத்மாவிற்கும், பரமாத்மாவிற்கும் உள்ள உறவினையும் வெவ்வேறு வழியிலே அணுகி இருக்கிறார்கள்.

உதாரணமாக, ஆத்மாவே இல்லை என்பது புத்தர்களின் ஒரு சூன்ய வாதம். அவர்கள் வேதாந்தத்தை ஏற்பதில்லை.

வேதாந்த வழியினை ஏற்பவர்களுள், ஆத்மாவும், பரமாத்மாவும் வேறு வேறானவை, சுதந்திரமானவை, என்றுமே ஒன்றாக முடியாதன என்பது மத்வாச்சாரியாரின் துவைத வேதாந்தம். ஆத்மா, பரமாத்மா இரண்டும், ஒரு மரமும் கிளையுமாக, ஓர் சிறந்த உறவுடனிருப்பன என்பது ஸ்ரீ ராமானுஜரின் விசிஷ்டாத்வைதம். இதனைப் போன்றே சைவம் முதலான சமய நெறிகளும், ஆத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள உறவினைப் பலவகையிலே ஆய்ந்து, நம்மை எல்லாம் படிப்படியாக உயர்த்திச் செல்கின்றன.

ஆனால், படிப்படியாக உயர்த்திச் செல்லும் இந்தப் பாதைகளை முற்றும் கடந்தால் மட்டுமே உணரப்படும் உண்மைதான் அத்வைதம் அளிக்கும் பேறு. அது, எல்லாவற்றிலும் ஒளிரும் பரமாத்மாவே, என்னுளும் 'நான்' என ஒளிரும் ஆத்மா எனக் காட்டுகின்றது. எனவே அது 'இரண்டற்றது'. அதாவது, பெருக்கவோ, வகுக்கவோ முடியாத, ஒன்றாய் மட்டுமே இருக்கும் சக்தி. எல்லாச் சமயப் படிகளையும் துணிவுடன் கடந்தால் மட்டுமே, அத்வைத வேதாந்தம் கூறும், இரண்டற்ற ஒன்றாகும் விடுதலையை நாம் அடைய முடியும்.

இவ்வாறு ஆத்மாவிற்கும், பரமாத்மாவிற்கும் அத்வைதம் காட்டும் உறவினைப் பல சான்றோர்களும், பெரியோர்களும் ஆய்ந்தும், எதிர்த்து வாதிட்டும் இருக்கின்றனர், இருப்பர். எனினும், வேதாந்தத்தை அடிப்படையாக ஏற்ற எல்லோருமே, ஆத்மாவே நமக்குள் உயிர்க்கும் ஒளி என்பதில் எவ்வித மாறுபாடும் கொள்வதில்லை. எனவே ஆத்மா எனும் பேருண்மை ஒன்றை உணர்தலே முதலான பயன் என்பதால், நாம் அதனை மட்டும் பிடித்துக் கொண்டு, வெறும் அறிவுச் சுமையான விவாதங்களை நாம் விட்டு விடலாம்.

அவ்வகையிலே, இந்த நாலாம் வரியில் காட்டப்பட்ட, ஆத்மாவின் உண்மைத் தன்மையையும், அதனையே சார்ந்து விளங்கும் உலகங்களின் நிலையற்ற தன்மையையும் மனதில் ஏற்று, நாம் வாழ்க்கையை ஒரு விளையாட்டாகவும், அதன்

காரணமாக வாழ்க்கையை உற்சாகமாகச் சந்திக்கவும், இந்தப் பொன்னான காலைப் பொழுது புலரட்டும்.

இத்துடன் பகவான் ஆதி சங்கரர் அருளிய ப்ராத ஸ்மரண ஸ்தோத்திரம் எனும் நந்நூலின், பண் விளக்கம் நிறைவுறுகிறது.

## முடிவுரை

'ஆத்மா அஜம் அநித்ரம் அஸ்வப்னம் அநாமிகம் அரூபகம் அசூன்யம் ஸர்வக்ஞம்' என்பது பகவான் ஆதி சங்கரரும் தொழும் குரு கௌடபாதரின் வாக்கு.

'அஜம்' (பிறப்பற்றது) எனில், பிறப்பின் அடையாளமான வல்லுடல் ஆத்மாவுக்கு இல்லை. எனவே 'ஜாக்ரதா' எனும் விழிப்புலக அனுபவங்கள் ஆத்மாவுக்கு இல்லை. அது போலவே 'அநித்ரம்' (துயிலற்றது), 'அஸ்வப்னம்' (கனவற்றது) என்பதால், மெல்லுடல், வினையுடல் அற்று, அதனால், கனவும், துயிலும் அற்று எப்போதும் மேலான விழிப்புடனே இருப்பது ஆத்மா. அது 'அநாமிகம்' என்றால், அது பெயரற்றது எனவும், பேச்சால் விளக்கப்பட முடியாதது எனவும் பொருள் தரும். 'அரூபகம்' என்றால், உருவமோ, குணமோ அற்றது. அப்படியானால், அது ஒன்றுமே இல்லாத சூன்யமோ என்றால், இல்லை! அது முழுதும் நிறைவானது all potential. 'ஸர்வக்ஞம்' - எல்லாம் அறிந்தும், நிறைந்தும் இருப்பது.

இவ்வாறு மறையுள் மெய்யாகவும், நமது மெய்யுள் மறைவாகவும் இருக்கும் ஆத்மாவின் உண்மையை, நாம் அறிவதால், உரிய விழிப்பினை அடைவோம். வைகறை முதலாக, அந்த மெய்மறையைச் சிந்தித்துக் கொண்டே, நம் வாழ்க்கையில் செயலாற்றுவோம், செழிப்போம், சீராய் நிலைப்போம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

எழுமின்! எழுமுன் எழுமுள் ளேதோ
முழுமுன் னுலகும் முழுதும் விரியும்
எழுமின் எழுமென் எழிலே நானென
உழுமின் ஆன்மனை உல்கிடு மனமே

www.meenalaya.org

rajjag@gmail.com